Registered as a Newspaper பக்கங்கள்: 10 விலை: ரூபா 6-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்.

ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

## உடனடிப் போசனை உணவுப்பொருள் திறந்துவிற்பனை செய்ய தடைவிதிப்பு

யாழ் குடாநாட்டில் பெருகிவரும் குடல் சார்ந்த தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், தெருவோரங்கள், சந்தைகள், கோவில்கள், வைத்தியசாலைகள், விளையாட்டு மைதானம் போன்ற இடங்களில் வறுத்த கடலை, சோளம் தோல் நீக்கிய அன்னாசி, வெட்டிய பலாப்பழம், உறையிடப்படாத மிட்டாய் வகைகள், வெட்டிய மாங்காய், அப்பிள்பழம், ஈச்சம்பழம், அப்பம், இடியப்பம், பிட்டு, தோசை போன்ற மக்களின் உடனடிப்போசனை உணவுப் பொருட்களை ஈக்கள் மொய்க்காத, தூசி படியாத பொருத்தமான ஏதேனும் பொருளினால் மூடப்பட்டிருந்தால் ஒழிய, சுகாதாரச் சீர்கேட்டை உருவாக்கும் வகையில் விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலோ அல்லது விற்பனை செய்தலோ தமிழீழ உணவுச்சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். அத்துடன், யாழ். குடாநாட்டில் பொதியிடப்படும் சகல மனித போசனைக்கான உணவுப்பொருட்களும் (10-ம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 08 23 - 12 - 94 வெள்ளிக்கிழமை ஓசை 308

# இன்றைய அரசியல் நிலைபற்றி புலிகள் விளக்கம்

# மக்களின் அன்றாடப்பிரச்சினைகளுக்கு தீர்வு;

# தலைவர் பிரபாகரன் அரசிடம் வலியுறுத்து!

## இனப்பிரச்சினை கட்டம் கட்டமாக அணுகப்பட வேண்டும் என யோசனை

(யாழ்ப்பாணம்)

★ கட்டம் கட்டமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும்.

★ முதற்கட்டத்தில் தமிழ் மக்களின் அன்றாட, அத்தியாவசியமான பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்.

★ புலிகள் போர் நிறுத்தத்திற்கும், பேச்சுவார்த்தைகளுக்கும் எப்பொழுதும் தயாராகவே இருக்கின்றார்கள்.

★ புலிகளின் நிலைப்பாட்டை விளக்கி அரசிற்கு தலைவர் பிரபாகரன் பல கடிதங்களை எழுதியுள்ளார்.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். அரசியற்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனும உடன் இருந்தார்.

போர்நிறுத்தம், சமாதானப் பேச்சுக்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு, விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு - இந்நிலைப்பாடுகளிலுள்ள கருத்து முரண்பாடுகள் - இந்தவாரம் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் பின்போட்டதற்கான காரணங்கள்-போர்நிறுத்தம் ஏற்படுமா? பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகுமா? ஆகிய விடயங்கள் பற்றி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இப் பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

## ஆளும் கட்சியினர் - கிராமத்தவர் கடுகண்ணாவ ரயிலில் மோதல்

(கொழும்பு)

கடுகண்ணாவ ரயில் நிலையத்தில் ஆளும்கட்சி ஆதரவாளர்களுக்கும், கிராமத்தவர்களுக்கும் இடையே நடந்த மோதலில் ரயிலுக்கு சேதம் ஏற்பட்டது. இந்த ரயிலில் ஆளும்கட்சி ஆதரவாளர்கள் பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது. இதனால் ரயிலுக்கு ஏற்பட்ட சேதம் சுமார் நாற்பதுலட்சம் ரூபா பெறுமதியானது என ஆரம்ப மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று பேராதனையில் இடம்பெற்ற ஆளும் கட்சியின் மாநாட்டிற்கு சென்று திரும்பிய வேளையிலேயே இம் மோதல் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. சம்பவம் இடம்பெற்றபோது கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ரயிலில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இம் மோதலையடுத்து இப் பாதையில் சகல ரயில் சேவைகளும் மூன்று மணிநேரம் தாமதம் ஏற்பட்டது.

## பிரச்சினையால் ஆதாயம் அடைவோர் சமாதானத்துக்குத்தடையாய் உள்ளனர்

- லயனல் பெர்னாண்டோ

(கொழும்பு)

தற்பொழுது உள்ள நிலை ... யும் குழுக்கள் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு ... தைகள் கால தாமதமாவதற்கான காரணங்கள் தொடர் ...

னப் பேச்சுக்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு, விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு - இந்நிலைப்பாடுகளி

கள் - இந்தவாரம் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் பின்போட்டதற்கான காரணங்கள்-

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகுமா? ஆகிய விடயங்கள் பற்றி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

## சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசின் உற்சாகம் தணிந்துவிட்டது

சந்திரிகா குமாரதுங்கா அரசு ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்த அக்கறை - உற்சாகம் - புலிகளோடுபேசவேண்டுமென்ற அவா, இவையெல்லாம் இப்போது தணிந்து போய் மிகவும் அவதானமாக- பெரியளவில் அக்கறை கொள்ளாமல் - பேச்சுக்களை பின்னடித்து அரசாங்கம் செயற்பட்டு வருகின்றமை அவதானிக்கக்கூடிய விடயமாக உள்ளது.

கொழும்பில் குண்டு வெடித்தது - காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டதற்கு புலிகள் மீதான சந்தேகம் போன்றன காரணமாக சந்திரிகா குமாரதுங்காவின் ஆர்வம் குறைந்து போயிருக்கலாம் எனவும் சிலர் கூறுகிறார்கள்.

ஆனால், ஒரு முக்கிய விடயம் என்னவென்றால்-கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் புலிகளுக்கு எதிராக முடுக்கி விடப்பட்டிருந்தது. அதாவது- சந்திரிகா குமாரதுங்காவுக்கு அளிக்கும் வாக்குகள் ஒவ்வொன்றும் புலிகளுக்கு அளிக்கப்படும் வாக்குகளாகவே இருக்கும் என எதிர்க்கட்சிகள் குரலெழுப்பின. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதாக சந்திரிகா குமாரதுங்கா பிரசாரம் செய்தார்.

## சிங்கள மக்கள் சமாதானத்திற்கான மனுவை அரசிடம் கொடுத்துள்ளனர்

இவ்வாறான பேச்சுக்களுக்கு எதிரான - சாதகமான பிரசாரங்கள் காமினிகொலை நிகழ்வினை தொடர்ந்தும் நடந்தன. அப்படியிருந்தும் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து சந்திரிகா குமாரதுங்காவுக்கு பெரியதொரு மனு ஒன்று கொடுக்கப்பட்டது.

சமாதானத்துக்கும் பேச்சுவார்த்தைக்கும் அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்ட ஒரு மனுவாகவே நாங்கள் அதைப் பார்க்கின்றோம்.

ஆகவே கொலை நிகழ்வை வைத்து சந்திரிகா குமாரதுங்கா தளர்ந்துபோய் - குழம்பிப்போய் இருக்கிறார் என்ற நியாயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது

இன்னும் மிகவும் வேகமாக - மிகவும் உற்சாகமாக அரசு செயற்பட வேண்டும் என்ற காரணத்துக்காகவே மக்கள் தீர்ப்பை அளித்துள்ளார்கள்

## பேச்சுவார்த்தைக்கு எதிராக புலிகள் எந்த வகையிலும் செயற்படவில்லை

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் எந்த வகையிலும் பாதகமாக செயற்படவோ - அறிக்கைகள் விடவோ இல்லை. முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளிலும்நாங்கள் பங்கு பற்றினோம் - தொடர்ந்தும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களுக்கும் நாம் ஆயத்தமாக இருந்தோம்,

எப்போதும் போர் நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைகளுக்கும்நாங்கள் தயாராகவே இருக்கிறோம். எங்கள் தரப்பிலிருந்து எந்தப் பிரச்சினைகளும் ஏற்படுத்தப்படவில்லை

இந்நிலையில், சந்திரிகா அரசாங்கத்தின் அக்கறை குறைந்து ஆர்வம் குறைந்து, பேச்சுக்களை பிற்போடுவதற்கான காரணம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

நேற்று முன்தினம் அவர் தொலைக்காட்சியில் அளித்த பேட்டியில்கூட, விடுதலைப் புலிகளுக்கு பேச்சுக்களில் ஆர்வம் இல்லை என்ற தொனியில் தெரிவித்திருந்தார்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

(கொழும்பு)

தற்பொழுது உள்ள நிலைமையினால் ஆதாயம் அடை

## இரு படையினர் காயம்

கடந்த திங்கட்கிழமை காரைநகர் கடற்படைத் தளத்தின்மீது விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலின் போது இரு

[10ஆம் பக்கம் பார்க்க]

யும் குழுக்கள் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் இதனாலேயே இன்று சமாதானப் பேச்சுக்கள் ஒத்திவைக்கப்படும் நிலை ஏற்பட்டதாகவும் தகவல் அமைச்சின் செயலாளரும் முதலாம் கட்டப் பேச்சுக்களில் அரசதரப்பில் அங்கத்துவம் வகித்தவருமான லயனல் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் கால தாமதமாவதற்கான காரணங்கள் தொடர்பாக கூறுகையிலேயே அவர் இக் கருத்தைக் கூறினார். சமாதான முயற்சிகள் இரு தரப்பினரை மட்டும் திருப்தி செய்வதாக அமையவில்லை. பிரச்சினையால் நன்மை அடையும் குழுக்கள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்று மேலும் அவர் தெரிவித்தார்.

# வடக்கு இராணுவக் கட்டமைப்பில் ஆறு கட்டளைப் பணிமனைகள்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக - வடபகுதியில் ஆறு தனித்தனி ஆணைப் பகுதிகள் அமைக்கப்படவுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ் ஆணைப் பகுதிகள் அனைத்தும் ஒவ்வொரு மேஜர் ஜெனரல்களின் கீழ் செயற்படும். ஆனையிறவு, முல்லைத்தீவு, பூநகரி பகுதிகளில் நடவடிக்கைகளுக்கு பொறுப்பை ஏற்றுள்ளமேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க மேலதிகமாக விசேட அதிரடிப்படைஇரண்டின்பொறுப்பையும் ஏற்றுள்ளார்.

பிரிகேடியர் சிறிபீரிஸ் பீரங்கிப் படைப் பிரிவின் கொமாண்டராக பொறுப்பேற்றுள்ளார்.

[10ஆம் பக்கம் பார்க்க]



## வீரச்சாவு

### வீரவேங்கை நகைமுகன்

மணலாற்றுப் பிரதேசத்தில் கடந்த 20ஆம் திகதி இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் விடுதலைப புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை நகைமுகன் (சுப்பிரமணியம் கோணேஸ்வரன், முல்லைத்தீவு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வடபகுதி பயணிகள் மீது இராணுவம் ஷெல் வீச்சு

(வவுனியா)

வடபகுதியிலிருந்து பயணிகள் வவுனியா நோக்கி வரும் போது இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

கடந்த ஞாயிறு காலை இச் சம்பவம் நடைபெற்றது. இராணுவத்தினரது காவலரண்களுக்கும் புலிகளின் காவலரண்களுக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேசசெயலக ரீதியான தொடர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலக ரீதியான 1995-ம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டத்துக்கான திட்டமிடல் தொடர்பான ஆலோசனைக்கான கலந்துரையாடல் நடத்தப்படுவதற்கானஏற்பாடுகள் மேற்கொள்

(10ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## மொத்த விற்பனை

கிறிஸ்மஸ்சோடனை, அழகுசாதனப்பொருட்கள், றேடியோ, கைக்கடிகாரம், எவர்சில்வர் பிளாஸ்ரிக் பொருள்கள், பாடசாலை - தையல் உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பொலித்தீன் வகைகளை மொத்தவிலையில் பெற்றுக் கொள்ளுங்கள். ஜெயா அழகு மாடம், 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், (சி-10902)

## 'வேதமுரசு' நூல் வெளியீடு

(கொழும்புத்துறை)

கச்சாய் ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலில் இடம் பெறும் திருவாசக முற்றோதலைத் தொடர்ந்து இன்று பிற்பகல் 2.30 மணக்கு தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத் துணைத் தலைவர் திரு சு. இராசரெத்தினம் தலைமையில் ''வேதமுரசு'' நூல் வெளியீடு இடம் பெறும். (24)

## மெய்யியல் நோக்கு

(யாழ்ப்பாணம்)

''மெய்யியல் நோக்கு'' சஞ்சிகை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் துறையினால் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது.

இச் சஞ்சிகை அருட் திரு. டி. ஏ. யோசப் அவர்களால் ஆக்கப்பட்டுள்ளது.

மெய்யியல், சமூகவியல், உளவியல், அரசியல் சம்பந்தமான ஆக்கங்களைத் தாங்கி இச் சஞ்சிகை வெளியாகியுள்ளது. (இ)

## சுவடுகள்

தேசியத் தலைவரின்உறுதியை இலட்சியப் பற்றை, சுதந்திர தாகத்தை, கொள்கைப் பற்றைச் சித்திரிக்கின்றன.

எமக்கு கிடைத்த அற்புதமான தலைவனின் வழிகாட்டலில் எமது தேசம் புதிதாக மலரும் என்பதை இக் கவிதைகள் சுட்டுகின்றன.

'இருளில் ஒளிரும் முத்து-
அலை
கடலில் கலங்கரை விளக்கு
அடிமை விலங்கொடிக்கும்
புலி-எம்
நம்பிக்கை எல்லாம் நீ'

கவிஞர்எமக்குதரும் செய்தி இது. இச் செய்தியினூடே நாம் எமது தலைவனில் வைத்துள்ள நம்பிக்கையை

# பயிலுநர் தேவை

## திட்டமிடல் அலுவலர்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் எம்மால் கோரப்படுகின்றன. இதற்கான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

01. கல்வித்தகைமை:-
க.பொ.த. (உயர்தரம்)
(பொருளியல், கணக்கியல், வர்த்தகம் உட்பட)

02. மேலதிக தகைமை:-
ஆங்கில அறிவும் விரும்பத்தக்கது.

03. அனுபவம்:-
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 31.12.1994**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

பொதுமுகாமையாளர்,
திட்டக் கிளை,
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

(சி-10973)

# சேவை நலன் பாராட்டு

இலங்கை வங்கி
காங்கேசன்துறை கிளை முகாமையாளர்

**உயர் திரு நா. விவேகானந்தன்**
அவர்களின்
இணையில்லா முப்பத்தி எட்டாண்டு சேவையை

**வாழ்த்துகின்றோம்!**

23 - 12 - 94



சித்தன்கேணியென்னும் சீரொழுகு வீர மண்ணில்
வித்தகனாய் வந்துதித்த விவேகானந்தன் நல்லோன்
நித்தம் நீழ்கல்வி நிதானமாய் முடித்துப்பின்
அரசாங்க அச்சகத்தே ஆர்த்தெழுந்தார் சேவைவாழி!
இலங்கைவங்கிச் சேவைக்கோர் வலக்கரம் போலாகி
இணைந்து வங்கிச் சேவையிலே காசாளர் ஆகி
கண்ணியமாய் மேற்பார்வை உதவி முகாமையாளராய்

# கிறிஸ்மஸ் விழா

நெல்லியடி எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபையின் கிறிஸ்மஸ்விழா நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று பி.ப. 2 மணிக்கு நடைபெறுகின்றது. தலைமைப் போதகர் அருட்திரு. மோர்வின் குணச்செல்வம் அவர்கள் தேவசெய்தி வழங்குவார். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(10471) சபைப் போதகரும் விசுவாசிகளும்

## நீங்காத நினைவோடு

## 1-ம் ஆண்டில்



செல்வன் இராஜதுரைஇராஜேஸ்வரன்/இதயா
(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்தர பழைய மாணவன்)

| அன்னை மடியில்: | அரக்கன் பிடியில்: |
|---|---|
| 26-08-1968 | 03-01-1994 |

டண்பின் உறைவிடமே பாசத்தின் உயிரே
எங்கள் அன்புச் செல்வமே இதயா!
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்டு விட்டீர்
உன்மனம் போல் இங்கு வந்து பிறந்திடையா.

நாவற்காடு, அச்சுவேலி.

உன் பிரிவால் வருந்தும் குடும்பத்தினர்.

[10465]

31ஆம் நாள்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

# நினைவு கூருகின்றோம்...

## 23.12.1994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - குருமண்வெளிப்பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். கோபு** (கதிர்காமத்தம்பி சபாரத்தினம் - கல்லடி - மட்டு)

**2-ம் லெப். கிருஷ்ணா** (- தேவசகாயம் - பாலையடிவெட்டை - மட்டு)

1987-ம் ஆண்டு உரும்பராய் பகுதியில் இந்தியப் படையினரின்சுற்றிவளைப்பின்போதுவீரச்சாவெய்திய,

**சுதா** (செல்வராணி சிதம்பரப்பிள்ளை 3- ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

**லெப். தர்சினி** (ரஞ்சினிதேவி சிவசுப்பிரமணியம் - சேமமடு - ஓமந்தை - வவுனியா)

**மேஜர் முரளி** (வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம் - சர்வோதய வீதி - ஆவரங்கால்)

**கப்டன் காந்தி** (கனகரத்தினம் செல்வகுமார் - கொழும்புத்துறை - யாழ்)

**பஞ்சன்** (கணபதிப்பிள்ளை பஞ்சாட்சரலிங்கம் - நீர்வேலி வடக்கு - யாழ்)

**நிதி** (சிவமனோகரி இராசலிங்கம் - இடைக்காடு, அச்சுவேலி - யாழ்)

**அமுதன்** (செல்வராசா அமுநன் - நல்லூர் வடக்கு - யாழ்)

**நிகிந்தா** (பிறேமலதா பாலசுந்தரம் - கண்டிவீதி, சாவகச்சேரி - யாழ்)

**நிர்மலா** (டொறின் அஜந்தி அன்ட்றூ - தேவாலய வீதி, சுண்டுக்குளி - யாழ்)

**நிரா** (விநாயமூர்த்தி நிராகரன்-கோப்பாய் வடக்கு யாழ்)

1988-ம் ஆண்டு காங்கேசன்துறையில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளின் சுற்றிவளைப் பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் அன்பு** (பத்திநாதன் அமலராஜன் - சவரியோடை, மயிலிட்டி யாழ்)

பரந்தன் 40 அடிபாலத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**உங்கு / சுதா** (காசிநாதன் ஜெகநாதன் - கோரன்கட்டு - கிளிநொச்சி)

காரைநகரில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் இன்குர்** (கணநாதர் குணநாதன் - சிவன் கோவிலடி வட்டுக்கோட்டை - யாழ்)

தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தயா** (அருச்சுனன் ஜெயதாசன் - மானிப்பாய்-யாழ்)

இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தம்பையா குருகுலசிங்கம்** (சங்குவேலி வடக்கு - மானிப்பாய்)

1989-ம் ஆண்டு உன்னிச்சைக் காட்டுப் பகுதியில்

வைத்துள்ள நம்பிக்கையை கணித்துக் கொள்ளலாம்.

ஆம்; எமக்கு கிடைத்திருக்கும் தலைவனின் காலத்தில் இந்த தேசம் சிரித்துக் குலுங்கும் என இந்த நூல் எமக்குச் சொல்கிறது.

**எங்கள் தாய்த்திருநாடு**

எமது தேசத்தைப் பற்றியும்,போராட்டத்தைப் பற்றியும் அறியக்கூடிய வகையில் இந்த சிறு நூலில் பல செய்திகள் உள்ளன.

'எமது தலைவர்', 'எமது நாடு', 'எமது தேசியக் கொடி' என ஒவ்வொன்றைப் பற்றிய விளக்கமும் கூறப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு இந்த நூல் பெரிதும் உதவக் கூடியது.

'விடுதலை வேட்கை என்னும் ஆன்ம தாகத்தால் அடிமை இருள் தொலைக்க அக்கினிக் குஞ்சுகளாக அணி வகுத்த இவர்கள் பிரபாகரன் என்ற பெரு நெருப்பின் பிள்ளைகள்' என எமது போராளிகள்' பற்றி தரப்பட்டுள்ள விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மாதிரி கலைச் சுவையுடன் படிப்பதற்கு சுவையான வரிகளுடன் இந்த நூல் திகழ்கிறது.

---

## போர்முனையில்

**ps for Landing operations)** என்பன படைப்பலத்திற்கு அணி சேர்த்தன.

ஆனாலும் இன்றைய நவீன யுத்தக்கப்பல்கள் எவ்வளவோ முன்னேற்றமும் வசதிகளையும் தொழில் நுட்பத்தையும் கொண்டன. தரைப்படை, விமானப்படை என ஏனைய துறைகள் வளர்ச்சி பெற்றாலும் ஒரு தேசத்தின் எல்லை பெரும்பான்மையாக கடலாக இருக்கும் நாடுகளுக்கு கடற்படையின் வளர்ச்சியும், நவீன மயமாக்கலும் எப்போதும் இன்றியமையாததாகவே அமையும்.


கண்ணியமாய் மேற்பார்வை உதவி முகாமையாளராய்
உயர்ந்த முகாமையாளர் விவேகானந்தரை
வாழ்த்திடுவோம்!
பலவங்கிப் படியேறி நலம்பொங்கப் பணியாற்றி
இலங்கை வங்கிக்கே இணையில்லாப் புகழ்சேர்த்த
வியத்தகு முகாமையாளர் விவேகானந்தன் அவர்களின்
முப்பத்தி எட்டாண்டு சேவையின்று வாழ்த்திடுவோம்!

வாடிக்கை போற்றும் வளமெலாம் நீர் பெற்றீர்
நாடித்தினம் வருவோரை தேடி ஓடிப் பணிசெய்தீர்
கூடிப்பணி செய்வோரின் குறைதீர்க்கும் குணம்
கொண்டீர்
காங்கேசன் இலங்கைவங்கி முகாமையானீர்
விவேகானந்தன் ஐயா
நீர் நீடு வாழ்வீர்! நன்றே

சேவைநலம் வாழ்த்துவது
**விளையாட்டுக் கழகம்,**
**இலங்கை வங்கிக் கிளை,**
**காங்கேசன்துறை.**

(10960)



## கூறுவிலை

பின்வரும் வேலைகட்கு கூறுவிலை கோரப்படுகின்றது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரில் வந்து பெற்று 31-12-94-ம்திகதிக்குமுன் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கவும்

1. கட்டிடத்திற்கு மை பூசுதல், திருத்த வேலைகள் செய்தல்
2. காவலாளி வதிவிடம் ஒன்று பனைமரத்தால் அமைத்து, தகரத்தால் கூரை போடுதல்
3. துவிச்சக்கரவண்டிதரிப்பு நிலையம் ஒன்றுஅமைத்தல்

**பொது முகாமையாளர்**
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை,வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி-10980)



†

## PRAYER

**OH JESUS PRAY FOR US**
**BLESSED MOTHER PRAY FOR US**
**ST. ANTHONY PRAY FOR US**
**FAVOURS GRANTED**
**PUBLICATION PROMISED**

[9868]




## வெங்கடாசலம் வேலும்மயிலும்

ஓய்வு பெற்ற இலிகிதர்

**(அண்ணாச்சியண்ணா, வல்வெட்டித்துறை)**

**தோற்றம்:** **09-10-1927**

**மறைவு:** **23-11-1994**

அன்பால் பண்பால் அறிவால் எங்களை
வழிநடத்தி வாழ்வூட்டிய எமது
அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை
விட்டுப் பிரிந்து சென்றாலும் எம்
இதயத்தில் என்றும் இடம்பெற்று வாழ்வீர்களாக.

எமது அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 23-12-1994 வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

26-11-1994-ல் நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி சகலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும், நேரிலும், தொலைபேசிமூலமும், கடிதம் மூலமும் எமக்கு அனுதாபச் செய்திகளை அனுப்பிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

401, புளுமென்டால் வீதி,
கொழும்பு - 13.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(10385)

1989-ம் ஆண்டு உன்னிச்சைக் காட்டுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**தீபன்** ( - - அம்பாறை)

மட்டு - ஆரையம்பதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**தாமு / அண்ணாச்சி** (சின்னத்தம்பி ரணசிங்கம் - மண்முனைவீதி, ஒல்லிக்குளம் - மட்டு)

1990-ம் ஆண்டு மயிலம்பாவெளி, 13-ம் கிராமப் பகுதியில் ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த,

**விஜி** (- - காரைதீவு - அம்பாறை)

**றிச்சார்ட்** ( - - காரைதீவு - அம்பாறை)

**கதிர்** (காரைதீவு - அம்பாறை)

**மூர்த்தி** (இருதயபுரம் - மட்டு)

மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்காப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப்.ராஜன்** (சிவஞானசுந்தரம் குகதாசன் -மஞ்சவனப்பதி, கொக்குவில் மேற்கு -யாழ்)

**2-ம் லெப். அருள்நேசன்** (வல்லிபுரம் பாலேந்திரன்- பாலைத்திடல் சாவகச்சேரி)

**ஜெறோம்** (தர்மராசா சசிக்குமார் -மருத்துவமனை வீதி, சங்கானை - யாழ்)

**மித்திரன்** (எட்வேட் சிவநாதன் - பெனடிற்குமார். உயரப்புலம், ஆனைக்கோட்டை யாழ்)

அம்பாறை-16-ம் கொலனியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**முகிலன்** ( - - வீரமுனை அம்பாறை)

மட்டு - மண்டூர்ப்பகுதியில் ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த,

**அரசன்** ( - - ஆரையடிவேம்பு - மட்டு)

1991-ம் ஆண்டு வவுனியா - சமயபுரம், கோவில் பண்ணைக்குச் சென்றுகொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப் கிட்லர் / துஷ்யந்தன்** (இராசதுரை சிறியகுமார் - பாவற்குளம் - வவுனியா)

இதே தினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10978)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# அன்று யூகோசிலேவியாவுக்கொரு பொசுனியா இன்று ருஷ்யாவுக்கொரு செச்சென்யா

## பாலகுமாரன்

படையெடுப்பதா, வேண்டாமா என்கிற நீண்டகால தயக்கத்தின் பின் செச்சென்யா மீதான படையெடுப்பிற்கு உத்தரவிட்ட ருஷ்ய அதிபர் போரிஸ் யெல்ட்சின் அதன் பின்னர் வெளியில் முகம் காட்டவேயில்லை. இரண்டொரு நாட்களாக அவர் எங்கிருக்கின்றார் என்பதே தெரியவில்லை. இதனால் மொஸ்கோவில் பெருத்த பரபரப்பே ஏற்பட்டது. பின்னர் தான் ''நிலையற்ற மனமும்'' ''நிரம்பிய போதையில் மிதப்பவருமான'' யெல்ட்சின் மொஸ்கோ நகர மருத்துவமனையொன்றில் இருப்பது தெரிய வந்தது இச்சம்பவமே செச்சென்ய சிக்கலின் தீவிரத்தை விளக்க போதுமானது. ஏனென்றால் 19 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் 12 இலட்சம் மக்களை உள்ளடக்கிய சிறிய நாடான செச்சென்ய 1991-ம் ஆண்டு ஏனைய முன்னாள் சோவியத் குடியரசுகள் செய்தது போல சுதந்திரப் பிரகடனம் செய்த போது அதைத் தடுக்க ருஷ்யாவால் முடியாது போயிற்று. செச்சென்ய மக்கள் தமது விமான நிலையத்தை மூடி தமது நாட்டில் இருந்த ருஷ்யத் துருப்புக்களை அப்போது வெளியேறச் செய்துவிட்டனர். குழம்பிய நிலையில் இருந்த அப்போதைய ருஷ்ய இராணுவம் பணத்திற்காக விற்ற சுடுகலன்களால் அப்போதே செச்சென்யா நிரம்பி வழிந்ததாக கூறப்பட்டது. அன்று தொட்டே செச்சென்யாவின் முக்கியத்துவம் கருதி அதைத் தன்னோடு இணைக்க ருஷ்யா படாதபாடுபட்டு வருகின்றது இவ்வாறுதான் ஜோர்ஜிய மாநிலம் பிரிந்தபோது ஜோர்ஜியாவிலிருந்து பிரிய வேண்டி போரிட்ட அப்காசிய மக்கட்கு உதவிய தன் மூலம் ஜோர்ஜியாவை 1993-ம் ஆண்டளவில் பணிய வைத்த தனது தந்திரத்தை இங்கும் யெல்ட்சின் செய்ய முயன்றார். செச்சென்ய தலைவர் சோகார் துதாயேவுக்கு (Dzokhar Dudayev) ... ருஷ்ய போர் வீரர் சிறை பிடிக்கப்பட்டு பணயம் வைக்கப்பட்ட போது அம்பலமான தால் பெருத்த தோல்வியில் முடிந்தது.

தனது ருஷ்ய சாமிராச்சிய உடைவின் தொடக்கமாக செச்சென்யா அமைந்து விடும் என்கிற பயத்தால் செச்சென்ய தலைவர்கட்கு தமது ஆயுதங்களை ஒப்படைக்க ஒரு கால்க் கெடுவை இம் மாதம் வழங்கிய பின்னர் இப்போது செச்சென்ய தலைநகரான குரோஸ்னியை முற்றுகையிட ருஷ்ய இராணுவம் முனைவதற்கு யெல்ட்சின் உத்தரவிட்டுள்ளார். இப்போது குரோஸ்னியை ருஷ்ய இராணுவம் அண்மித்து விட்டது. ருஷ்யாவின் மிகையொலிதாரைவிமானங்கள் பேரிரைச்சலோடு குரோஸ்னி மீது பறந்து தாக்குகின்றன. தாங்கிகள், தாக்குதல் உலங்கு வானூர்திகள், பீரங்கிகள்சகிதம் ருஷ்ய இராணுவம் நகர்கின்றது. ஆனால் இத்தகைய மிரட்டல்களுக்கெல்லாம் செச்சென்ய இசுலாமிய மக்கள் அஞ்சுகின்றவர்கள் அல்லர். அவர்கள் பண்பு அத்தகையது. அவர்கள் மட்டுமல்ல வட கோக்கசஸ் மலை வாழ் பகுதி மக்களின் வீரப் பண்பு அத்தகையது. கிழக்குஐரோப்பாவிலேயே மிக்க வீரம்செறிந்த மக்களாகஇவர்கள் கருதப்படுகின்றனர். எனவேதான் இன்று பாலர் தொட்டு முதியோர்வரை ருஷ்யாவுக்கு எதிரான போராட்டத்தில் குதித்து விட்டனர். தாமாகவே முன்வந்து வீதித் தடைகளை ஏற்படுத்தி தாங்கிகள் நகராமல் மனிதத் தடைகளை ஏற்படுத்தி ருஷ்யஇராணுவத்தை திட்டித் தீர்க்கின்றனர். கிராமங்கள் தோறும் போராட்டக் குழுக்களை ஏற்படுத்துகையில் அகப்பட்ட ஆயுதங்களோடு வீதிக்கு வந்துவிட்டனர். பாரிய ருஷ்ய இராணுவத்தின் நகர்வு அவர்களுக்கோ அவர்களின் தலைவர் துதாயேவுக்கோ அச்சத்தையோ அல்லது ஆச்சரியத்தையோ சற்றும் ஏற்படுத்தவில்லை. இது அவர்கள் எதிர்பார்த்தது தான். ஏனென்றால் விடுதலையின் விலையென்ன ...

> "எந்த வரலாற்றுக்காரணிகள் யூகோசிலேவியாவை முன்னாள் யூகோசிலேவியா என்று சொல்லவைத்தனவோ அவைஇப்போதுருஷ்யாவுக்குள்ளும் இயங்கத்தொடங்குகின்றன. பொசுனிய முசுலிம்கட்கு எதிராக சேர்பியரின் பெரும் தேசிய வாதத்திற்கு துணைபோகும் யெல்ட்சின் முசுலிம் பகுதியான செச்சென்யா மீது படையெடுத்திருப்பது வரலாறு மீண்டும் திரும்புகின்றது என்பதையே குறிக்கின்றது."

றார்கள். ஏனென்றால் அவர்களின் மரபு சரணடைந்து அவமானப்படுவதைவிட சாவதே மேல் என்பதே.

பெரும் எடுப்பில் ருஷ்ய இராணுவம் குரோஸ்னியை நோக்கி நகர்கின்ற போதும் அது நகருக்குள் பிரவேசிக்குமா என்பது ஐயமே. அப்படி பிரவேசித்தாலும் 4 லட்சம் மக்களைக் கொண்ட மலைப்பாங்கான இந் நகரின் வளைந்த குறுகிய வீதிகளிலே மிக மோசமான அபாயங்களை ருஷ்யப்படை எதிர் நோக்க நேரிடும் என்றே இப்போது குரோஸ்னிய நகருக்குள் தங்கியிருக்கும் பி.பி.சி. முகவரும் கூறுகின்றார். இப்போது குரோஸ்னிய நகரிலே மக்கள் நடமாட்டம் இல்லையென்றும் ஆயுதம் தாங்கியோரும் ஒரு சில முதியோருமே தென்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். குரோஸ்னிய நகரை முற்றாக வளைத்துபாதைகளைத்துண்டித்து தலைமையை சரணடைய செய்ய ருஷ்ய இராணுவம் முயலலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால் தமது மானம் காக்க போராடத் தயங்காத செச்சென்யர் மலைப் பகுதிகட்கு பின் வாங்கி தொடர் கெரில்லாப் போராட்டமொன்றை ஆரம்பிப்பர் என்பதே இன்றைய நிலை. ''எங்களை இப்போதைக்கு வேண்டுமானால் வெல்லலாம். ஆனால் வென்றவர்கள் சவப் பெட்டிகளில் திரும்பிச் செல்ல வேண்டும்'' என அம் மக்கள் தலைவர்கள் அறை கூவுகின்றனர். தூங்கிக் கிடக்கும் ஓநாயை (ஓநாய் செச்சென்யரின் தேசிய விலங்கு) இடறி எழுப்பினால் உலகிலே மிக அபாயமான விலங்காக அது மாறும் என துதாயேவ் கூறிவிட்டார். இக் கூற்றுக்களை இம் மக்கள் பற்றி அறிந்தோர் வெறும் பேச்சுக்களாக கருதவில்லை. எனினும் இப்போது மேற்குலகே மௌனம் காக்கின்றது. அமெரிக்காவோ இது யெல்ட்சினின் உள்வீட்டு விவகாரம் எனக்கூறி முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. ஆயினும் விரிந்து பரந்து கிடக்கும் இசுலாமிய உலகிலோ மெலிதான எதிர்ப்புக்குரலை துருக்கியும் பாக்கித்தானும் எழுப்புகின்றன. ஆனால் நீண்டகாலமாகவே வாய்திறவாதிருந்த அறிக்கை வெளியிட்டுள்ளார். வட கோக்கசஸ் பகுதி வாழ் ஏனைய மக்கள் ருஷ்ய ஆக்கிரமிப்பை கண்டிக்கின்றனர், எதிர்க்க முற்படுகின்றனர். இசுலாமிய வாத அடிப்படைக் குழுக்கள் விழிப்படைகின்றன. இப்போது அரசியல் ஆய்வாளர்களோ பாசுனியாவுக்கு அடுத்தது செச்சென்யா என தமது ஆய்வுகளை முடுக்கி விட்டுள்ளனர். எந்த வரலாறுக் காரணங்கள் யூகோசிலேவியாவை சீர் குலைத்து அதை இன்று முன்னாள் யூகோசிலேவியா என அழைக்க வைத்தனவோ அக் காரணங்கள் இன்று ருஷ்யாவுக்குள்ளும் இயங்கத் தொடங்கி விட்டன என்றும் பொசுனிய முசுலிம்கட்கு எதிராக சேர்பியரின் பேரினவாதத்திற்கு துணை போகும் யெல்ட்சின் இப்போது செச்சென்யாவில் படையெடுத்திருப்பது வரலாறு மீண்டும் திரும்புகின்றது என்பதையே குறிப்பதாக என்றும் வரலாற்றாளர் கூறி நிற்கின்றனர்.

யெல்ட்சினைபொறுத்தவரையில் செச்சென்ய சிக்கல் என்பது ஏற்கனவே அவருக்குள்ள தொல்லைகளோடு பெரும் தொல்லையாகப் போகின்றது. படையெடுப்பிற்கு தயக்கம் காட்டி இணக்கம் ஒன்றை அடையவே யெல்ட்சின்விரும்பியபோதும் செச்சென்யாவின்இயற்கை வளம், அதன் அமைவிடம் என்பதுவும் ருஷ்யாவின்உறுதிப்பாட்டிற்கு மிக்க அவசியமானவை என்பதால் அவர் படையெடுக்க முடிவு எடுத்தார் எனகருதப்படுகின்றது. மிக்கஇயற்கை வளங்கள் நிரம்பிய கோக்கசஸ் பகுதியை இழப்பதையே செச்சென்யாவின் பிரிவினை குறிக்கும். மேலும் மத்திய ஆசியப் பகுதிகளையும் கஸ்பியன் கடல் பகுதிகளிலுமுள்ள நிரம்பிய எண்ணெய் வளமுட்பட பாரிய இயற்கை வளப் பகுதிகளை இணைக்கும் வீதிகள் பெரும் குழாய்கள் என்பனவும் இப் பகுதிக்கு ஊடாகவே செல்கின்றன. இவற்றில் பல இப்போது கிளர்ச்சியாளரால் நாசமாக்கப்பட்டு விட்டன. அத்தோடு முன்னர் செச்சென்யா ஆண்டு தோறும் 20 மிலியன் எண்ணெயை தமது சுத்திகரிப்பு ஆலைகள் மூலம் உற்பத்தியாக்கின. இன்று இவற்றில் 1/5 ... யருக்கு தொடர்பு இருப்பதாகவேறு யெல்ட்சின் ஐயமுறுகின்றார். இத்தகைய காரணங்கட்காகவே அவர் படையெடுப்பிற்கு உத்தரவிட்ட போதும் இப்போது ருஷ்யாவிலே குறிப்பாக மொஸ்கோ நகரிலேயே பெருத்த இராணுவப் பாதுகாப்புக்கள் செய்ய வேண்டிய அவல நிலை தோன்றிவிட்டது. கொழும்பு நகரிலே சிங்கள இராணுவமும் பொலிஸ்துறையும் கூறுவதுபோல் 'குண்டுகள் வெடிக்கும் கவனம்' என்றும் ''பொதிகளைக் கண்டால் தூர விலகுங்கள்'' என்றும் பலத்த எச்சரிக்கைகளும் தேடுதல்களும் இப்போது ருஷ்யரை வாட்டுகின்றன ஏனென்றால் இடம்பெயர்ந்து வாழும் 2 இலட்சம் செச்சென்ய முசுலிம் மக்கள் ருஷ்யாவில் பரந்து வாழ்கின்றனர். ஏறத்தாழ 40 ஆயிரம் பேர்வரை மொஸ்கோ நகரில் இருப்பதாக தெரிகின்றது எனவேதான் துதாயேவ் ''மொஸ்கோ குரோஸ்னியை தாக்கினால் குரோஸ்னி மொஸ்கோவை தாக்கும்'' என எச்சரித்ததன் பொருள் இதுவாகி விட்டது. இதைத்தான் யெல்ட்சினின் உதவியாளர் ''எதைத்தான் நாம்செய்தாலும் இறுதியில் அது மோசமான விளைவுகளையே தருகின்றது'' என்றார்.

இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைக்காரணம்ருஷ்யா ஒரு தேசிய இன நாடல்ல என்பதே. ருஷ்யாவின் பெரும் தேசிய இனமான ருஷ்யர்க்கும் ஏனைய பல தேசிய இனங்கட்கும் உள்ள முரண்பாடு மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. ருஷ்ய சம்மேளனத்தின் இன, மொழி, மத, பண்பாட்டுத்தோற்றம் உலகிலே எங்கும் காணப்படாத சிக்கலான தன்மை கொண்டது. 100க்கு மேற்பட்ட பல்வேறு இனக் குழுக்கள் அங்கு உண்டு.

152 மிலியனுக்கு மேற்பட்ட ருஷ்ய குடித் தொகையில் 40 மிலியனுக்கு மேல் ருஷ்யஇனத்தை சேராதோர் தாத்தாரியர், முசுலிம்கள், மொங்கோலியர், கோகசஸ் பகுதியினர் யூதர், ஸ்பெக், துருக்கியர் என டல்வேறு தரப்பினர் அங்குண்டு ருஷ்ய முடியரசுக் காலத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்ட இவர்கள் ... த்தில் இவர்கட்கும்ருஷ்யப்பெரும்தேசிய இனத்திற்குமுள்ள முரண்பாடுகள் மறையாத போதும் அவை தணிவிக்கப்பட்டன. ஏனென்றால் அக் காலத்தில் ஏழை விவசாய தொழிலாளி பின்னணி கொண்ட அவ்வத் தேசியங்களைச் சேர்ந்தோரில் பொதுவுடமைவாதிகளாக அடையாளம் கண்டோர் அவ்வவ் உள்ளூர் பகுதி தலைமைக்கு உயர்த்தப்பட்டதாலும் உள்ளூர் மட்டத்தில் குறிப்பிட்டளவு சொந்தப் பண்புகளை பேண வழிவகுக்கப்பட்டதுமே காரணம் ஆனால் சோவியத் வீழ்ச்சியோடு எல்லா உறவுகளுமே முறிந்து போயின. விட்ட இடத்திலிருந்து தொடர இம்மக்கள் இன்று தயாராகி விட்டனர். 1992-ம் ஆண்டிலிருந்தே தாத்தாரிய மக்கள் வாழும் Tatarstan பகுதி பிரியப் போவதாக முன்னறிவிப்புச் செய்து வருகின்றது சக்கலின் தீவுக் கூட்ட குடியரசுகளோ தாம் யெல்ட்சினின் அடிமைகள் இல்லையென போர்க் குரல் எழுப்புகின்றன. ருஷ்ய இனத்தவர் வாழும் சைபீரியப் பகுதிக் குடியரசுகள் கூட மிகக் கூடிய சுயாட்சி அதிகாரம் கோருகின்றன. இன்றும் பல தமது தேசிய வளத்தில் மிகக் குறைந்த பகுதியையே ருஷ்யாவுக்கு வழங்க முன் வருகின்றன. இதனால் தான் இவ்வாறு நிலைகள் நீடித்தால் ருஷ்யா 50, 60 பகுதிகளாக ருஷ்யா துண்டாடப்பட்டு 1000 வருடங்கட்கு மேலான போரை சந்திக்க நேரிடும் என யெல்ட்சின் சில காலம் முன்னர் கூறிக் கவலைப்பட்டாராம்.

எனவேதான் செச்சென்யாவின் போக்கு யெல்ட்சினுக்கு பெருத்த தலைவலியாகிவிட்டது. ஆனால் செச்சென்ய மக்கட்கோ தமது இறைமையை காக்க பல நூறு ஆண்டுகளாக போராடிய பின் 19-ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் ருஷ்ய படைகளால் தோற்கடிக்கப்பட்டு தாம் இழந்ததன்னாட்சி பெறுவதே ஒரே இலட்சியம். அதற்காகவே இன்று போராடுகின்றனர் அதேவேளை ... தாக்குப்பிடிக்கும் என்பதும் ஒரு சிக்கல் மிகுந்த ஊழல்களும் நிரம்பி தகுந்த வேதனமுமின்றியிருக்கும் ருஷ்ய இராணுவத்தை தன்னோடு வைத்திருக்க யெல்ட்சின் மிகுந்த கவனம்செலுத்துகின்றார். இதனால்தான் யெல்ட்சினின் எதிர்ப்பாளர்கள் செச்சென்ய படையெடுப்பிற்கு எதிராக பெருத்த எதிர்ப்பை தெரிவிக்கின்றனர். இப்படையெடுப்பினைக் காரணம் காட்டி யெல்ட்சின் பாதுகாப்புச் செலவை அதிகரித்து அவசரகால நிலையை பிரகடனம் செய்து தம்மை நசுக்கி விடுவர் என்ற பயம் அவர்கட்கு இத்தகைய நிலையிலே பெரும் சூதாட்டமொன்றில் யெல்ட்சின் இறங்கிவிட்டார். இப்போது ருஷ்ய இனத்தை சாராத சோவியத்திலிருந்து பிரிந்து சென்ற முன்னாள 14 குடியரசுகளிலும் பதற்றம் ஏற்படுகின்றது ஏனென்றால் இன்று தனி நாடுகள் ஆகிவிட்ட இவற்றில் 30 மிலியனுக்கு மேற்பட்ட ருஷ்ய இனத்தவர் சிறுபான்மையினராக சிதறிக் கிடக்கின்றனர். இவர்கள் நலனைப் பாதுகாக்க வேண்டியதும் தனது கடமை என அடிக்கடி யெல்ட்சின் கூறி ருஷ்ய பெரும் தேசிய வாதத்தை உயிர்ப்பித்து வருகின்றார் இப்போது தென் கோக்கசஸ் பகுதி எல்லைகளை மூடி செச்சென்யாவுக்கு வெளி உதவிகள் கிடைக்காமல் தடுக்கும் முயற்சிகளிலும் ருஷ்ய இராணுவம் ஈடுபட்டிருப்பதாக தெரிகின்றது இறுதியாக கிடைத்த செய்திகளின்படி அசர்பைஜான், ஜோர்ஜியா ஆகிய இரு நாடுகளோடான தனது எல்லையை மூடிவிட்டதாக ருஷ்யா அறிவித்தது இந் நோக்கத்திலேயாகும்.

எனவே தான் எல்லாவகைகளிலும் செச்சென்ய படையெடுப்பு என்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது ஆகிவிட்டது. பல நூற்றாண்டு காலமாக புகைந்து உள்ளுக்குள் புரையோடிக் கிடந்த வரலாற்று காரணிகள் ...

செய்ய முயன்றார். செச்சென்ய தலைவர் சோகார் துதாயேவுக்கு (Dzokhar Dudayev) எதிரான உமர் அவ்டேக்கனேவுக்கு இரகசியமாக உதவிகளை வழங்கி செச்சென்யாவை பணிய வைக்க அவர் எடுத்த முயற்சி செச்சென்ய வீரர்களால்

இது அவர்கள் எதிர்பார்த்தது தான். ஏனென்றால் விடுதலையின் விலையென்ன என்பது அவர்கட்கு வரலாற்றுப் பாடம். பாரிய இராட்சத இயந்திரக் கருவிகட்கு தீனியாக தமது குருதியை தமது சொந்த மண்ணில் இப்போது அவர்கள் சிந்துகின்

பாக்கித்தானும் எழுப்புகின்றன. ஆனால் நீண்டகாலமாகவே வாய்திறவாதிருந்த லிபியத் தலைவர் கேணல் கடாபியோ ''செச்சென்ய முசுலிம் மக்களை கொல்வது என்பது இசுலாமிய உலகோடு யெல்ட்சினின் உறவுகளை பாதிக்கும்'' என கடுப்பாக

தமது சுத்திகரிப்பு ஆலைகள் மூலம் உற்பத்தியாக்கின. இன்று இவற்றில் 1/5 பங்குகூட ருஷ்யாவுக்கு இப்போது கிடைப்பதில்லை. அத்தோடு இன்று ருஷ்யாவை ஆட்டிப்படைக்கும் மாபியா இரகசியவன்முறைக்குழுக்களோடுசில செச்சென்

காலத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்ட இவர்கள் ருஷ்யப்புரட்சியின் பின் ஸ்டாலின் காலத்தில் கடும் அடக்குமுறைகட்கு உட்பட்டபோதும் தமது தேசிய அடையாளங்களை இன்றுவரை காப்பாற்றியே வந்துள்ளனர். பொதுவுடமை கட்சியின்ஆட்சிக்கால

அதற்காகவே இன்று போராடுகின்றனர் அதே வேளை ருஷ்யத் தரப்பிலும் பெருத்த குழப்பமே நிலவுகின்றது. தமது முன்னைய மதிப்பையும் செல்வாக்கையும் இழந்து சிதறியிருக்கும் ருஷ்ய இராணுவம் எவ்வளவு காலம்

காலமாக புகைந்து உள்ளுக்குள் புரையோடிக் கிடந்த வரலாற்று காரணிகள் இப்போது உயிர் பெற்று இயங்கத் தொடங்கி விட்டன. இவற்றின் விளைவுகள் என்னாகும் என்பது இனி வரலாறு சொல்ல வேண்டிய செய்தியாகப் போகின்றது.

# இந்திய அரச ஊழலில் புதிய சுவைதரும் பாரிய சீனி இறக்குமதி மோசடி!

சீனி இனிப்பானதுதான். ஆனால் அதுவே இந்திய அரசியல்வாதிகளுக்கு இப்போது கசப்பானதாகி விட்டது, இவ்வாண்டின் ஆரம்பப்பகுதியில் சீனி இறக்குமதியில் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெற்ற ஊழல் இன்று சில அமைச்சர்களின் இராஜினாமாவிற்கும் சிலரின் இராஜினாமா முன் முயற்சிக்கும்அடிகோலிவிட்டது இந்த நெருக்கடியானநிலைமை இவ்வாண்டு இறுதிக்குள் பிரதமர் நரசிம்மராவ் தனது அமைச்சரவையில் சில மாற்றங்களை கொண்டுவருவதற்குஒரு காரணியாகிவிட்டது (மற்றைய காரணி அண்மைய மாநில சட்டசபை தேர்தல் முடிவுகளில் காங்கிரஸ் கட்சியின் படுதோல்வி, சீனி இறக்குமதியில் மத்திய அரசமட்டத்தில் இடம்பெற்ற ஊழல் குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்ட கியான் பிரகாஷ் ஆணைக்குழு தனது அறிக்கையை வெளியிடஅனுமதிக்கும் அளவிற்கு பிரதமர் நரசிம்மராவ் உள்ளானார். இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதை வெளியிட வேண்டாம் என்று பிரதமர் ராவ் தடுத்திருந்தார்.

கியான் பிரகாஷ் ஆணைக் குழுஇம்மோசடியில் பிரதான குற்றவாளியாக மத்திய உணவுத்துறை இணையமைச்சர் கல்பனாத் ராயையே சுட்டிக்காட்டுகின்றது. கல்பனாத் ராய் இந்தியாவினுள் சீனிபற்றாக்குறை ஏற்பட்ட சமயம் சீனி இறக்குமதியை தொடர்ந்து எதிர்த்துள்ளார். எனினும் பின்னர் இறக்குமதி செய்வதென்ற காலம் தாழ்த்தி எடுத்த முடிவு குறித்து அவர் பொருத்தமான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

தனது நடவடிக்கைக்கு இணையமைச்சர் கல்பனாத் ராய் கொடுத்த விளக்கம், உள்நாட்டில் சீனி விலை உயர்வை தடுக்க இறக்குமதி செய்ய வேண்டும் என்பதை நான் ஏற்கவில்லை. உள்நாட்டில் சீனி உற்பத்தியை அதிகரித்து உபயோகத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் விலைகளை கட்டுப்படுத்தலாம் என்பதாகும் ஆனால்இதற்கு என்ன நடவடிக்கைகளை முதலில் மேற்கொள்ள வேண்டும் என்பதை அவர் கூறவில்லை என்பது அவதானிக்கத்தக்கது. எவ்வாறாயினும் அமைச்சர் கல்பனாத் ராய் சீனி இறக்குமதி நெருக்கடிக்கு தாமே பொறுப்புஎன்ற கியான் பிரகாஷ் குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளார். சீனி இறக்குமதி மோசடியில் கல்பனாத் ராய் மட்டுமல்ல நிதியமைச்சர் மன்மோகன் சிங், அப்போதைய மத்திய அமைச்சரவை செயலர் கபர் சைபுல்லா, விநியோகத்துறையமைச்சர் ஏ. கே அந்தனி என்பவர்களும் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நிதியமைச்சர் பொது விநியோக முறைக்கான சீனி இறக்குமதிக்கு அதிக நிதியுதவி வழங்க மறுத்துவிட்டதாக குற்றஞ்சாட்டப்படுகின்றார். அமைச்சரவை செயலாளர் சைபுல்லா சம்பந்தப்பட்ட அமைச்சுகளோடு சரியான ஒருங்கிணைப்பை செய்யவில்லை எனப்படுகிறது. அத்துடன் அவர் நிலைமை குறித்து பிரதமருக்கும் எடுத்துக் கூறவில்லை. ஏ. கே. அந்தனி தனது அறிக்கைகளை தெளிவாக சமர்ப்பித்திருக்கவில்லை. இவர்களது கூட்டு மொத்த செயற்பாட்டினால் துரதிர்ஷ்டவசமாகஅப்போது உலக சந்தையிலும் சீனிவிலை அதிகரிப்பினால் இந்திய அரசுக்கு 650 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஊழலின் ஆரம்பம்

கடந்த ஆண்டு டிசம்பரில் விலைகளை நிர்ணயம் செய்யும் அமைச்சரவைக்குழுக்கூட்டம் இடம்பெற்ற போது 1993 - 94 காலப்பகுதியில் இந்தியாவின் சீனி உற்பத்தி 115 லட்சம்தொன்னாக இருக்கும் என்ற மதிப்பீட்டு அறிக்கைஒன்றைசீனிஉற்பத்தியாளர்கள் சமர்ப்பித்திருந்தனர். எனினும் 19 லட்சம் தொன் பற்றாக்குறை ஏற்படவாய்ப்பிருப்பதால் 15 லட்சம் தொன் சீனியை இறக்குமதி செய்து வைத்துக்கொள்வோம் என உணவு விநியோக அமைச்சர் ஏ. கே. அந்தனி குறிப்பிட்டதை உணவுத்துறை இணையமைச்சர் கல்பனாத்ராய்வன்மையாகஎதிர்த்தார். 115 லட்சம் தொன் சீனி எப்படியும் உள்நாட்டில் உற்பத்தியாகும்என அவர்மீண்டும்மீண்டும் வலியுறுத்தினார் இறக்குமதியை விரும்பாமைக்குஉலக சந்தையில்சீனிவிலை உயர்வை அவர் சுட்டிக்காட்டினார். சீனி அவசியம் இறக்குமதி செய்வதென்றாலும் அதற்காக ஒப்பந்தம் செய்து இருமாதங்களுள் சீனி இறக்குமதிக்கு வந்துவிடும். அதனால் 1994 பெப்ரவரியில் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கலாம் என அமைச்சர் ராய் கூறினார்.

ஆனால் அதே ராய் மார்ச் மாதம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தான் முன்பு கூறியதற்கு எதிர் மாறாக நின்றார். சீனி உற்பத்தியாளர்களின் மதிப்பீடுகள் தவறு என்றும் சீனி உற்பத்தி 104 லட்சம் தொன் அளவிலேயே வரும் என்றும் குறிப்பிட்டார். நவம்பர் கூட்டத்தில் அமைச்சர் ஏ. கே. அந்தனி இதையே கூறியிருந்தார். 10 லட்சம் தொன் சீனிஇறக்குமதி செய்வது என்ற அந்தனியின் யோசனையை இறுதியில் இப்போது ராய் ஏற்றார்.

இதன்பின் ராய் இவ்விடயத்தில் தலை நீட்டவில்லை. மே மாதமாகியும் சீனி இறக்குமதி இல்லை. உள்நாட்டில் சீனி தட்டுப்பாடு. விலைகள் உயர்ந்தன. இதை சாதகமாக்கி தனியார் வர்த்தகர்கள் அரசின் சுங்கவரி சலுகையைப் பயன்படுத்தி தாமே சீனி இறக்குமதியில் இறங்கினர். உள்நாட்டில் நிலவிய விலை உயர்வை தமக்கு பணமாக்கினர்.

மே மாத நடுப்பகுதியில் ராய்நாட்டில்இல்லாத சமயம் நிலைமை மோசமடையவே சைபுல்லாவுடன் கலந்தாலோசித்த உணவு துறை செயலர் ஏ.சி.சென் இந்திய உணவுக்கழகம் மூலம் சீனிஇறக்குமதிக்கான கேள்விப்பத்திர அறிவிப்பை வெளியிட்டார் இதை அறிந்த கல்பனாத்

**துஷ்யந்தன்**

ராய் உடனடியாக புதுடில்லி திரும்பினார், தன்னிடம் அனுமதி பெறாமல் கேள்விப்பத்திரம் கோரப்பட்டதாக கூறி அதை ரத்துச் செய்தார்.

இதன் பின்பாக சீனி இறக்குமதியின் போது அதன் விலையை குறைக்க அதிக மானிய உதவியாக 600கோடி ரூபா தர வேண்டும் என்ற கோரிக்கையை நிதியமைச்சர் மன் மோகன் சிங் மறுத்தார்.

சீனி இறக்குமதி தாமதித்ததால் உள் நாட்டில் சீனி விலை உயர்ந்து கொண்டே சென்றது. இதற்கு இறக்குமதி நிறுவனங்களே காரணம் எனக்குற்றஞ்சாட்டப்பட்டது உள்ளூர் வியாபாரிகள் விலையை அதிகரித்து லாபம் பெறும் வகையில் இறக்குமதியை தாமதப்படுத்துவது என சமரசம் காணப்பட்டிருக்கலாம் எனக் கருதவும் இடமுள்ளது. பற்றாக்குறை பற்றி உணவுத்துறையமைச்சு தானே ஒரு ஆய்வை நடத்தி இருந்தால் யார் கொள்ளை லாபம் அடித்தார்கள் என்பதை கண்டறிந்திருக்க முடியும் என நிதியமைச்சர் மன்மோகன் சிங் கூறியிருப்பது ஊழல் எத்துணை மட்டத்தில் நடைபெற்றுள்ளது என்பதை காட்டுவதாக அமைகின்றது.

இணைஅமைச்சர் கல்பனாத்ராய் பதவி விலகி விடத் தயார் எனக் கூறினாலும் கூட தாம் நேர்மையான மனிதர் என்றும் அமைச்சரவை செயலர் சைபுல்லா தான் அனைத்துக்கும் காரணம் என்றும் கூறுகிறார்.

எவ்வாறாயினும் உள்நாட்டில் பொருளுக்கு தட்டுப்பாடு நிலவுகையில் - அதன் விலை உயர்கையில் -உடனடிஇறக்குமதி தாமதிக்கப்பட்டதும் - காலம்தாழ்த்திஇறக்குமதிக்கு அனுமதித்தபோதும்அந்த இறக்குமதியில் தனியார் சிலர் ஈடுபடும் வகையில் அரச இறக்குமதி நிறுவனங்களின் செயற்பாட்டை திட்டமிட்டு தாமதிக்க செய்ததும் - உயர்மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணம் பெறும் நோக்கிலான திட்டமிட்ட ஊழல் நடவடிக்கை என்பதைக் காட்டுகின்றது. இவ்விவகாரம் தற்போது நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இது தொடர்பாக விவாதம் ஒன்றை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் கோர ஆளும் கட்சியினர் அதை எதிர்க்கதினமும் சபை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்படும் நிலை தற்போது காணப்படுகின்றது. சீனி இந்திய அரசை கலக்க ஆரம்பித்திருக்கின்றது.

## பின்னேர மீன் வாங்க பொன்னாலை போகலாம்



யுத்த நிறுத்தமாமே
மெத்த மகிழ்ச்சி.
''வரத்து மீன்'' வாய்க்கு ருசி.
இனி....
பொன்னாலைக் கடலுக்குச் சென்று
பின்னேர மீன் வாங்கலாம்.
பண்ணைப் பாலத்தில் நடந்தபடி
பால்நிலவேறும் அழகை ரசிக்கலாம்.
காவலரண் கம்பியில்
தோய்த்த உடுப்பைக் காயப் போடலாம்.
மலையென உயர்ந்த மண்ணரணில்
பற்றிப்படர்ந்துள்ள அறுகம் புல்லில்
பசுமாட்டை மேயவிடலாம்.
ஊமையாகிப் போனது
எதிரியின் துப்பாக்கி வாய்.
கூவிய எறிகணைக் கழுகின் முட்டைகள்
குஞ்சுக்கு வைத்தபோதே கூழாகிப்போனது.
எல்லாம் சரி.
கையில் கிடைத்தளவு காணுமென்றா
பையிற் போட்டுக் கொண்டாய்?
யுத்தம்; உனக்கும் நிறுத்தம் தானே!
அதையேன் மறந்தாய்?
போரை போரால் நிறுத்த முயன்றவன்
தோற்றுப் போனான்.
பேச்சால் நிறுத்த நினைத்தவன்
ஜெயித்து விட்டானா?
தட்டிலென்ன இருக்கிறது?

# சிறுகதை

# பப்பா வருவாரா?....

காற்று இன்னும் சில்லிட்டு வீசிக் கொண்டிருந்தது. கரோல் கீதங்கள் இன்னமும் காதுக்குளட்டாததால்முகாம் பிள்ளைகள் ஒருவரையும் வெளியில் காண முடியவில்லை.

கரோல் கீதங்கள் காதுக்கு எட்டும் மாத்திரத்தில் முகாமுக்கு வந்து வழிகாட்டும் மண்றோட்டில் புழுதி கிளப்ப பிள்ளைகள் ஓடுவது தினசரிக் காட்சியாகி விட்டது.

கிறிஸ்மசுக்குஎண்ணி மூன்று நாட்கள் இருக்கையில், ஊர் முழுக்க சுத்தி வரும் பப்பா-இன்னமும் முகாமுக்கு வராததில் எல்லாப் பிள்ளைகளுக்கும் உள்ள வருத்தம் முகங்களில் தெரிந்தது.

முகாம் வாசலில் தெரியும் இரண்டு மூன்று நெருப்புத் துண்டுகள் இன்னமும் அப்பையாக் கிழவரும் அவரது சோடிகளும்நித்திரைக்கு போகாததை காட்டி நின்றது.

பீடித்துண்டை கடைசி இடுக்கு மட்டும் அவர் பாவிக்க மட்டும் -அவர் கதைக்கும் கதைகளை கேட்க ஒரு கூட்டமொன்று அவரை சுற்றி நிற்கும்.

முகாமின் கடைசி நிரையில் ஓரத்தில் அந்தக் குடிசையில் இன்னமும் குப்பி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. காற்றுக்கு அணைவது போல் வெளிச்சம் குறைந்து பின் திடீரெனச் கூடி விளக்கு சுவாலை நடனமாடிக் கொண்டிருந்தது.

''பப்பா -ஏனம்மா எங்கள பார்க்க வர்ராறில்ல காலைத் தூக்கி தாயின் மடியில் போட்டவண்ணம் சுரோமன் கேட்டான்.

பிலோமினா தனது கண்களை இறுக்க மூடி சுரோமனின் கதையை கேட்டதும் கேட்காதது மாதிரி இருக்கின்றாள். தகப்பன் அன்ரனி செத்த பின்பு - தாய் இப்படி தன்கதைகளை கேட்டும் கேட்காமலும் இருப்பதை சுரோமன் பல தடவை கண்டிருக்கிறான்.

சுரோமன் தன் காலால் தாயின் மடியைத் தட்டியபடி ''பப்பாஎங்களோடகோவமா அம்மா'' என்று மெல்லிய குரலில் மீண்டும் கேட்டான்.

பிலோமினா தனது கண்களை திறந்து சுரோமனை பார்த்தாள் சுரோமனின் ஏமாற்றத்தை அவளால் தாங்க முடியவில்லை.

''பப்பா ஒருத்தரோடயும் கோவிக்க மாட்டாரப்பன்...

சுரோமனின் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. பிலோமினா மகனின் காலை வருடி விட்டாள். அந்த சிறுவனின் கண்களில் தெரிந்த சந்தோஷம் அவளுக்கு கணவனின் நினைப்பையே தந்தது. குளமாகிய கண்களை மகன் காணாமல் துடைத்துக் கொண்டாள். அலைந்தாடிக் கொண்டிருந்த குப்பி விளக்கின் சுடர் அணைந்து கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

அன்ரனி - பிலோமினாவின் திருமணத்துக்குப் பின் இரண்டு வீட்டாருமே அவர்களை ஒதுக்கி விட்டபின் பிலோமினாவுக்கு எல்லாமே அன்ரனியாகத்தான் இருந்தான். சில்லாலைக் கற்பார் பூமியில் கைகள் வெடிக்க கல்லுக் கிளறி குடிசை போட்டு முடித்து - நாரி முறிக்க விறகு கட்டி வந்து வாழ்க்கையைக் காப்பாற்றி அன்ரனி செய்தவையெல்லாம் பிலோமினாவுக்கு கனவாகத்தான் இருந்தது.

விடிகாலையில் பனிப்புகாருக்கு மத்தியிலும் தூரத்தில் தெரியும் பாத்திமா சேர்ச்சைப் பார்த்து 'ஆண்டவனுக்குத் தோத்திரம்' சொல்லி விட்டு சைக்கிளின் ஒவ்வொரு பகுதியும் சத்தமிட அவன் விறகு கட்டப் போகும்போதும் அவளால் அழத்தான் முடிந்தது.

சுரோமன் பிறந்த பிறகு சந்தோஷக்கீற்று தெரிந்த அந்தக் குடிசையில் அதுவும் கொஞ்சக் காலம்தான் இருந்தது.

குண்டுச் சத்தங்கள் கேட்க-என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் ஓடிய ஊரோடு சேர்ந்தோடி தொட்டிலடிச் சந்தியில் நின்று பார்த்தபோது தெரிந்த புகைமூட்டம் அவளது வாழ்க்கையையும் மூடி விட்டதை அவளால் அப்போது உணர முடியவில்லை.

விறகு கட்டப் போன அன்ரனி எப்படியும் தொட்டிலடியால்தான் வருவான் என சுரோமனை ஒரு கையில் பிடித்தபடி காத்திருந்தாள் பிலோமினா. 'கர்த்தரே எந்தப் பிரச்சினையும் இருக்கக் கூடாது.' அவளது வாய் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது.

தொடர்ந்தும் சில்லாலைப் பகுதியில் கேட்டுக் கொண்டிருந்த சத்தங்கள் அவளது வேண்டுகோளை புறத்தே தள்ளிக் கொண்டிருந்தன.

தேடிக் கொண்டு விளானுக்குள்ளால போகலாம் எண்டு போறார்' என்றான் அன்ரனியோடு விறகுகட்டப் போகும் மரியன்.

'ஐயோ பிதாவே! பிலோமினா உரத்த குரலில் அழத் தொடங்கினாள்.

அன்றைக்கு விளானால் போன அன்ரனி அதற்குப் பிறகு திரும்பவே இல்லை.

சுரோமனோடு அவள் அல்லாடி அல்லாடி கடைசியாக இந்த அகதிமுகாமுக்கு வந்து சேர்ந்திருந்தாள்.

ஃ ஃ ஃ

வெளிச்சம் கண்களைக் கூசியது. கட்டிப்பிடித்தபடி படுத்திருந்த சுரோமனை ஒரு கையால் விலக்கி ஆதரவாகக் அணைத்து படுக்க வைத்தாள் பிலோமினா.

'இண்டைக்கும் எப்பிடியாவது சேவியர் பெஞ்சாதியோட வேலைக்கு போகத்தான் வேணும்' பிலோமினா தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

கிறிஸ்மசுக்கு சுரோமனுக்காவது ஏதாவது செய்ய வேணும். போன முறை வந்த நிவாரணச் சாமானில் கொஞ்சத்தை வித்து எடுத்த காசு நேற்றோடு மிச்சமில்லாமல் போச்சு அவளது எண்ணம் துடித்துக் கொண்டிருந்தது.

> ''தாத்தா... கிறிஸ்மஸ் பப்பா எங்கட முகாமுக்கு வருவாரா? என்றான். அப்பையாக் கிழவர் இருமி சளியைத் துப்பினார். வருவாரெண்டுதான் நினைக்கிறன். ஊரெல்லாம் போறவர் இங்கையும் வருவர்'' என்றார் கிழவர். சுரோமனுக்கு திருப்தி வந்தது. திரும்பவும் தூணடிக்கு கெந்திக்கெந்தி ஓடி வந்தான். அப்பையாக் கிழவர் அவனை வியப்போடு பார்த்தார்.

'அம்மா இராத்திரி பப்பா வந்தவரா அம்மா?' படுக்கையிலிருந்தபடி சுரோமன் கேட்டான். அவனுக்கு அதுதான் முக்கியமாக இருந்தது.

''வந்தா, குஞ்சை நான் எழுப்புவன்தானே'' பிலோமினாபதிலளித்தபடி வெளியே போனாள்.

ஃ ஃ ஃ

நேரம் மதியத்தை கடந்து கொண்டிருந்தது. இன்னும் இரண்டு நாளில் கிறிஸ்மஸ் என்பதால் முகாம் வாசலிலிருந்த ஆலமரத்தடியில் கூடியி

சுரோமன் வாசல் தூணோடு ஒட்டி நின்றபடி பிலோமினா வரும் பாதையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அங்கிருந்த பிள்ளைகளின் விளையாட்டிலும் பேச்சிலும் அவன் அக்கறை கொண்டதாக தெரியவில்லை. பிலோமினா பின்னேரம் வருமட்டும் சுரோமனின் இருப்பிடம் அந்த தூண்தான்.

''ஒராள் கன்னைக்கு காணாது சுரோமன் நீ வாறியா?'' விளையாடியவர்களில் ஒருவன் கேட்டான்.

''அவன் எப்ப வந்தவன்? நாங்கள் ஒரு மாதிரி விளையாடுவம்'' பதிலும் அங்கிருந்தே கிடைத்தது.

அவர்களை நிமிர்ந்து பார்த்த சுரோமன் மீண்டும் கண்களை பாதையில் திருப்பினான்.

யோசனையில் ஆழ்ந்திருந்த அவன், விளையாடிக் கொண்டிருந்தவர்களிடம், 'பப்பா இண்டைக்கு வருவாரா'' என்று மெலிதாக கேட்டான்.

அவர்கள் இவனைக் கவனிக்கவில்லை. அருகே வந்த இன்னொருவனிடம்- ''பப்பா இண்டைக்கு வருவார'' மீண்டும் கேட்டான்,

'யாரடா இவன் .. ஒரே பப்பா' பப்பா எண்டு, பப்பா வந்தா வருவார்தானே' என்று கேலியாக கூறி விட்டு அவனும் ஓடினான்.

சுரோமன் திரும்பியும் தூணை தஞ்சமடைந்தான். அவனது கண்களில் மீண்டும் யோசனைகள் கோலமிட்டன

யாரிட்டை கேட்கலாம்?. அவன் சிந்தனையில் ஆழ்ந்தான். தூரத்தில் நடந்து வந்து கொண்டிருந்த அப்பையாக் கிழவர் கண்ணில் பட்டார். அவனோடு எப்போதும் அன்பாக கதைப்பவர்களில் அவரும் ஒருவர்.

அவரடி மட்டும் ஓடிச்

கேட்டார். அப்பையாக் கிழவர். அவனிடம் தயக்கம்'

''தாத்தா .. கிறிஸ்மஸ் பப்பா எங்கட முகாமுக்கு வருவாரா?'' என்றான். அப்பையாக் கிழவர் இருமி சளியைத் துப்பினார். ''வருவாரெண்டுதான் நினைக்கிறன். ஊரெல்லாம் போறவர் இங்கயும் வருவார்'' என்றார் கிழவர்.

சுரோமனுக்கு திருப்தி வந்தது. திரும்பவும் தூணடிக்கு கெந்திக் கெந்தி ஓடிவந்தான். அப்பையாக் கிழவர் அவனை வியப்போடு பார்த்தார்.

விளையாடிக் கொண்டிருந்தவர்களிடம் தயங்கித் தயங்கிச் சென்றான். ''நானும் வரட்டா விளையாட?'' என்ற அவனை எல்லோரும் வியப்புடன் பார்த்தார்கள்.

ஃ ஃ ஃ

முகாம் வாசலில் ஒரே குதூகலம். கரோல் கீதங்கள் ஓங்கி ஒலித்தன. சுரோமனும் பிலோமினாவும் குடிசையின் வாசலுக்கு வந்தனர்.

''எல்லாப் பொடிசுகளும் உங்கட உங்கட வீடுகளிலயே இருங்கோ. அப்பதான் பப்பா வருவார்'' உரத்த குரலில் அப்பையாக் கிழவர் குரலும் கேட்டது.

சுரோமனுக்கும் மகிழ்ச்சி தாளவில்லை. பிலோமினாவின் கையைப் பிடித்தபடி துள்ளினான்.

பப்பாவும் கோஷ்டியும் சுரோமனது குடிசையை நெருங்கி விட்டிருந்தனர்

பிலோமினா அவர்களை உள்ளுக்குள் கூப்பிட்டாள். பப்பா தலை ஆட்டி தனது வயிற்றைத் தடவியபடி- ''தம்பிக்கு என்ன வேணும்?'' என்றார்.

வெளியே கரோல் கீதங்கள் இசைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ''தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று யேசு சொன்னார்....''

**ரகுராம்**

பிலோமினாவின் நெஞ்சுக்குள் இருந்த வேதனைகள் வெளியே வரத் துடித்துக் கொண்டிருந்தது.

சுரோமன் - பப்பாவின் கேள்விக்கு பதில் சொல்லாமல் தாயைப் பார்த்தான், பப்பாவைப் பார்த்தான்.

பப்பா மீண்டும் கேட்டார்,

தட்டிலென்ன இருக்கிறது?
ஒன்றுமே இல்லை.
வெறும் தராசும் படியும் தான்.
தங்கு வேட்டையில் இது சகஜம்.
தளராது இருப்போம்.
'சிங்கவேட்டையே' எங்களின் இலக்கு.

- புதுவை இரத்தினதுரை

''பப்பா ஒருத்தரோட்டயும் கோவிக்க மாட்டாரப்பன்... இண்டைக்கில்லாட்டியும் கிறிஸ்மசுக்குள்ள கட்டாயம் வருவார் என்றாள்.

வேண்டுகோளை புறந்தே தள்ளிக் கொண்டிருந்தன.

'பிலோமினா அக்கா நீங்கள் இங்கயா இருக்கிறீங்கள். அன்ரனி அண்ணர் உங்களை

ருந்த ஆலமரத்தடியில் கூடியிருந்த பிள்ளைகளின் பேச்சிலும் அதுதான் அடிபட்டுக் கொண்டிருந்தது.

அவரடி மட்டும் ஓடிச் சென்றவன் ''தாத்தா'' என்றான். ''சுரோமன்.. என்னப்பன்?'' என்று குழைந்து

பப்பா மீண்டும் கேட்டார், ''என்னப்பன் வேணும் உங்களுக்கு?'' அவரது கைகளில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சுவடுகள்

# இதயநாதம்

# எங்கள் தாய்த்திரு நாடு

## ஒரு மனப் பகிர்வு

சுவடுகள்...இதயநாதம்.. எங்கள் தாய்த்திநாடு.. இவை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால்சமீபத்தில்ஒரே தினத்தில் வெளியிடப்பட்ட நூல்கள்.

**சுவடுகள்**

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மாவட்ட கோட்டப் பொறுப்பாளராக இருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களுடன் -மாணவரமைப்பு உறுப்பினராக, தேசவிடுதலைக்கு தம்மாலான பங்களிப்பு செலுத்துகையில் இந்திய-இலங்கை படைகளின் தாக்குதலினால் மரணமடைந்த மாணவமணிகள்16பேரினது வரலாற்றுச்சுவடுகள்இந்தம் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள 'சுவடுகள்' ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்க்கும் போது-

தேச விடுதலைப் போராட்டத்தில் மாணவ சமுதாயத்தின் பங்கு பெரியது என்பதை அவதானிக்க முடிகிறது.

எதிரி எங்கும் இருப்பான் என எண்ணிய வண்ணம் சாவை கருத்தில் கொள்ளாமல் இவர்கள் இயங்கியிருக்கிறார்கள்.

இவர்களின் மனோபலம் பெரிது. கொண்ட கொள்கையில் உள்ள பிடிப்பு பெரிது. இதனால்தான் உயிர்மலர் உதிர்வது தெரிந்தும் உறங்காமல் விடுதலைக்கான பயணத்தை தொடர்ந்திருக்கிறார்கள்.

'மாணவப் பருவம் என்பது மனித வாழ்வின் மகத்தான பருவமாகும். இப்பருவத்தில் ஏற்படும் சிந்தனையும் வெளிப்படும் ஆற்றலும் அலாதியானவையாகும். உலகில் எந்த விடுதலைப் போராட்ட வரலாற்றைப் புரட்டினாலும் அங்கே மாணாக்கர் புரிந்த தியாகமும் பங்களிப்பும் அளவிடற்கரியதாக இருப்பதைக் காணலாம்' என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ந. இன்பன் முகவுரையில் குறிப்பிட்டதற்கிணங்க எமது மண்ணின் விடிவிற்கான போராட்டத்திலும் மாணவர்களின் பங்கு தியாக உணர்வுடன் கூடியதாக இருப்பதை இந்தச் சுவடுகளில் தரிசிக்கலாம்-

**இதயநாதம்**

'ஒரு சூரியன் மட்டும் தான்
உலகில் உண்டு
ஒரு சந்திரன் மட்டும் தான்
உலகில் உண்டு
ஒரு எவரெஸ்ட் மட்டும்
தான் உலகில் உண்டு
ஒரு பிரபாகரன் மட்டும்
தான் உலகில் உண்டு
உன்னைப்போல்ஒளி கொடு
க்க யார் வருவார்'

இது ச. இசைச்செல்வன் எழுதிய கவிதை வரிகள். இதயநாதம் என்ற இந்த நூலில் எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களைப் பற்றிய கவிதைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

'காப்பியங்களிலும், இதிகாசங்களிலும் கற்பனைப் பாத்திரங்களாக உலா வந்த வீர புருசர்களுக்கு நிகராக ஒரு தலைவன் எங்கள் மண்ணிலே உயிரும், சதையுமான மனிதனாக எம்முடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டே தமிழர் சேனையை வழிநடத்தும் சேனாதிபதியாகக் கண்டு எம் மக்கள் மெய்சிலிர்த்துப் பாடிப் பரவிப் பரவசமடைகின்றனர்'

-இது விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இந் நூலுக்கு வழங்கிய வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலில் உள்ள கவிதைகள் அனைத்தும் எமது

(2 ம் பக்கம் பார்க்க)

வவுனியா திலீபன்

# சமூக நீதியும், விடுதலையுமே மூன்றாம் உலகின் இன்றைய தேவை

இன்று 'மனித உரிமைகள்' என்ற பதத்திற்கு பிளவுகள் கொண்ட உலகிலும், சிதைவுற்ற சமூகங்களிலும் ஆற்றலுள்ளவர், ஆற்றலற்றவர் அல்லது பலமுள்ளவர், பலமற்றவர் போன்ற நிலைகளில் தான் போதிய விளக்கம் பெற வேண்டி உள்ளது. மனித வரலாற்றில் மனித உரிமைகள் என்பது பாரம்பரியமாக சமூக நீதியின் பின்னணியில் நோக்கப்படவில்லை. மாறாக அது தனி மனித நலன்களை நோக்காகக்கொண்டே பார்க்கப்பட்டது. இதன் முக்கியம் இன்று வளர்ந்து வரும் மூன்றாவது உலக நாடுகளில் நன்கு உணரப்பட்டு மனித உரிமைகள் என்பது சமூகநீதி அல்லது விடுதலை என்ற நோக்கில் பார்க்கப்படவேண்டிய தேவை பெரும்பாலும் உணரப்பட்டு வருகிறது. ஒடுக்கப்படுவோருக்காகவும் நசுக்கப்படுவோருக்காகவும் நீதி கோரும் மக்கள், இன்று விடுதலைகோரும் குழுக்களாகவோ அல்லது இயக்கங்களாகவோ மாறுகின்ற தன்மையையும் நோக்கலாம்.

குறிப்பாகமூன்றாவது உலக நாடுகளில் மனித உரிமைகள் பற்றி நோக்குகையில் அங்கு மிக அடிப்படையிலான தேவை மனித உரிமைகள் அல்ல மாறாக ஒடுக்கப்படும் மக்களுக்குத் தேவையானது சமூக நீதியும் விடுதலையுமேயாகும். நீதியுள்ள சமூகத்தில் தனி மனித உரிமைகள் நன்கு பேணப்படுகின்றன. நீதியான சமூகத்துக்காகப் போராடாமல் வெறும் தனி மனித உரிமைகளுக்காகப் போராடுவது வெறும் முயற்சியாகவே அமையும்.

இதுவரை இரண்டு வல்லரசு சக்திகளால் அழுத்தம் பெற்றுவந்த மூன்றாவது உலகநாடுகள் இன்று மனித உரிமைகளை தனி மனித உரிமைகளாக மட்டும் பார்க்காமல் முழு விடுதலை பெறும் நோக்கில் அவற்றைப் பார்க்கும் தாகம் வளர்ந்து வருவதையும் நாம் காணலாம்.

மூன்றாவது உலக நாடுகளின் வரலாற்றை நோக்குகையில் அவை பெரும்பாலும் தனியுடமை ஆதிக்கத்தினாலும், காலனி ஆதிக்கத்தினாலும் அடிமைப்பட்டு சிதைவுற்றிருந்த நிலையைக் காணலாம். இன்றும் இவைகளின் தாக்கங்கள் இந் நாடுகளில் பெருமளவில் காணப்படுகின்றது. இக்காலனித்துவ ஆதிக்கங்களால் இந் நாடுகளில் இருந்த பாரம்பரிய தொழில், முறைகள் இயற்கை வளங்கள், விவசாய உற்பத்திகள் ஆதிக்க நாட்டவர்களுக்குச் சார்பாக மாற்றப்பட்டுள்ளன. இதற்கு உதாரணங்களாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சுதேச பாரம்பரிய விவசாயங்களின் வீழ்ச்சித் தன்மையைக் குறிப்பாகக் கொள்ளலாம்.

காலனித்துவ முறைமையிலிருந்து அரசியல் அதிகாரம் சுதேசிகள்வசமான பின்னரும் இவ்வரசியல் அதிகாரம் சமுதாயத்தில் ஏற்கனவே உயர் மட்டத்தில் இருப்பவர்கள் வசமே போய்ச் சேர்ந்தது. இதனால்சட்டங்களும்அமைப்புக்களும் இவர்களுடைய அதிகாரத்தைக் காக்கும் கருவிகளாக அமைந்தது. ஏனையோருக்கு சில சலுகைகளும் உதவிகளுமே வழங்கப்பட்டன இந்த அதிகாரப் பிளவு கீழ் மட்டத்தில் உள்ளவர்களை மனித உரிமைகள்பால் நலிவுறும் நிலைக்கு ஆளாக்கின. இப்பின்னணியில் ஒடுக்கப்பட்டோரின் விழிப்புணர்வு இயக்கங்கள், மனித உரிமைகளின் போராட்டங்களாகப் பரிணமித்தன.

வரலாற்றில், மனித உரிமைகள், தனி மனித உரிமைகளாகத்தான் ஆரம்பித்து அழுத்தம் பெற்றன. இருக்கின்ற சமுதாயத்தை மாற்றிஅமைக்காது தனி மனிதனின் உரிமைகளைக் காப்பதில் தான் மனித உரிமைக் கோட்பாடு பெரும் பங்குவகித்து வந்தது. இன்று மூன்றாவது உலக நாடுகளில் மனித உரிமைகள் பெறும் தனி மனித உரிமைகளாக வன்றி புதிய சமூகத்தை ஆக்கப்போராடும்மக்கள் உரிமைகளாக முக்கியம் பெறுகின்றன. இங்கு தனி மனித உரிமைகள், குழு உரிமைகளாக, மக்கள் உரிமைகளாக மாறுகின்றன. இவ்வாறான உரிமைப் போராட்டங்களும் விடுதலைப் போராட்டங்களாக பரிணமிக்கின்றன.

மனித உரிமைக் கோட்பாடென்பது மேலை நாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் அது தனிமனிதனையே மையமாகக் கொண்டே காணப்பட்டது. இவ்வாறான அணுகுமுறை முதலாளித்துவ சமூகத்தில் ஏற்கப்பட்டுவந்தஒன்று. சோஷலிசத்தைத் தழுவிய நாடுகளில், பொருளாதார உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவருகிறது.

நிவேதனன்

ஆனால் இம் மனித உரிமைகளைத் தனிமனித உரிமைகளாகவோ அல்லது இருக்கின்ற சமுதாயத்தின் ஒரு சில சீர்திருத்தங்களை மட்டும் செய்யும் மனிதஉரிமைகளைக் காப்பாற்றும் முறையாகவோ பார்ப்பது மூன்றாவது உலக நாடுகளுக்கு ஏற்ற அணுகுமுறையாக இருக்க முடியாது. மாறாக மனித உரிமைகள் மக்கள் உரிமைகள் என்ற உணர்வையும் சமூகத்தை மாற்ற வேண்டும் என்ற அழுத்தத்தையும் பெறவேண்டும். இவ்வணுகு முறையில் தான் மூன்றாவது உலக நாடுகள் எதிர்பார்க்கும் நீதி, சமத்துவம், விடுதலை போன்றவை சிறப்பிடம் பெறும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# “ தேசியத் தலைவரின் பரிசு எனது முயற்சிக்கு உத்வேகத்தைத் தந்தது”

## -தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவி சுதர்சனா

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் தோற்றி தேசிய மட்டத்தில் தெரிவாகி தேசியத் தலைவரின் பரிசையும் பாராட்டையும் பெறுவேன் என்ற நம்பிக்கை என்மனதில் திடமாக வேரூன்றியிருந்த போதிலும் அதி கூடிய புள்ளியைப் பெற்று முதல் மாணவியாக சித்தியடைய வேண்டும் என எதிர்பார்க்கவில்லை. முதல் மாணவியாகி தேசியத் தலைவரின் பரிசை பெறுவதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்கிறார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவியான சுதர்சனா மகேந்திரன்.

1994 ஆகஸ்டில் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் தேசியமட்டத்தில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளை (8 டி) பெற்றதுடன் அதிகூடிய புள்ளியான 710 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் தேசிய மட்டத்தில் முதல்தர மாணவியாக தேர்வு செய்யப்பட்டதுடன் தமிழ்ப் பாடத்தில்அதிகூடிய புள்ளியான 91 ஐயும் பெற்று இரட்டிப்பு மகிழ்ச்சியில் திளைத்திருந்த சுதர்சனாவை அவரது இல்லத்தில் சந்தித்தோம்

இச்சந்திப்பின் போது அவரிடமிருந்து அறிந்து கொண்டவற்றைத் திரட்டி வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.

நான் ஆரம்பக் கல்வியைக் கற்கின்ற காலத்திலேயே அம்மா மிகுந்த அக்கறை காட்டுவார். பாடசாலை விட்டு வந்ததுமே எனது கொப்பி, புத்தகங்களை எல்லாம் பார்த்து திருப்தியடைந்த பின்பே மதிய உணவு தருவா. ஆரம்ப காலத்தில் இருந்தே உடனிருந்து அம்மா காட்டிய ஒத்துழைப்பும் ஊக்கமுமே, இன்று இந்த பரிசை பெறுவதற்கு வழிசமைத்தது எனக் கூறலாம்.

எங்கள் குடும்பத்தில் அண்ணா அக்கா, தங்கை ஆகியோர் உள்ளனர். இவர்கள் எல்லோருமே நன்றாகப்படிக்கக் கூடியவர்கள். 1992 இல் நடைபெற்ற தமிழீழப்பொதுக் கல்வித்தேர்வில் அக்கா தேசிய மட்டத்தில் இரண்டாவதாக தெரிவாகி தேசியத் தலைவரின் பரிசை பெற்றுக்கொண்டார். அவருக்கு கணிதத்தில் நூறுபுள்ளிகள் கிடைத்தன. அன்றிலிருந்து நானும் தேசிய மட்டத்தில் முதல் பத்துபேர்களுள் ஒருவராக வந்து தேசியத்தலைவரின் பரிசை பெற



வேண்டும் என மனதுக்குள் திடசங்கற்பம் பூண்டேன்.

நாங்கள் எல்லோருமே புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளோம். பாடசாலையில் படிக்கும் போது ஒவ்வொரு தவணையும் முன்னணியில் வருவேன்,

வருடந்தோறும் பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் ஒவ்வொரு பாடத்திலும் அதிகூடியபுள்ளியைப்பெறும் மாணவருக்கு பரிசில்கள் வழங்கப்படும். இதில் வருடாவருடம் குறைந்தது பத்துப் பாடங்களுக்கான பரிசில்கள் எனக்கே கிடைக்கும்.

தினமும் காலை ஐந்து மணிமுதல் ஏழுமணிவரையும் கற்பேன். மாலை பாடசாலையால் வந்து மதிய உணவு அருந்தியபின் மூன்று மணி முதல் கல்வியைத்தொடர்வேன். எனக்கு கிடைக்கும் நேரங்களை எல்லாம் நான் வீணடிப்பது கிடையாது. அதனை படிப்பிற்காகவே செலவிடுவேன். உடனுக்குடனேயே படித்து சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதால் பரீட்சைக்கென விசேடமாக நேரம் ஒதுக்கிக் கற்க வேண்டிய அவசியமேற்படவில்லை.

பொதுக்கல்வித்தேர்வு ஆகஸ்டில் நடைபெறுவதால் பாடசாலையில் அவசர அவசரமாக பாடத் திட்டங்கள் பூர்த்தியாக்கப்படுகிறது. இதனால் மெல்லக் கற்கும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனினும் எமது பாடசாலையில் அத்தகைய மாணவர்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. பாடசாலையில் வாரந்தோறும் பரீட்சைகள் நடாத்தப்படுவதால் முதன் முதலாக பரீட்சைக்கு தோற்றுகிறோம் என்ற பதற்றமோ, பயமோ இருக்கவில்லை. பரீட்சை எழுதி முடித்ததுமே எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது.

இத்தேர்வு ஆகஸ்டில் நடாத்தப்படுவதால் அவசரப்பட்டு பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருப்பதுடன் மீட்டல் செய்வதற்கு போதிய அவகாசம் இல்லாது போய்விடுகிறது. இதனால் பொதுவாக பரீட்சைக்கென எல்லா மாணவர்களும்தம்மை முழுமையாகத் தயார் படுத்த முடிவதில்லை. இப்பரீட்சை ஓரிரு மாதங்களுக்கு பின் போடப்படுமானால் மாணவர்கள் இன்னும் சிறந்தபுள்ளிகளைப் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என எண்ணுகிறேன்.

இப் பரீட்சையானது தமிழீழ மாணவர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம் ஏனெனில் இப் பரீட்சைக்காகவே நாம் எம்மை முன்கூட்டியே தயார் செய்வதால் பாடத்திட்டம் முன்கூட்டியே முடிக்கப்படுகிறது. பரீட்சை ஒன்றை எழுதியதன் மூலம் அடுத்து நடக்கப்போகும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு தயக்கமின்றி முகம் கொடுக்கக்கூடியதாயிருந்தது. பொதுக்கல்வி தேர்வுமுடிவடைந்தபின்வரும் மூன்று மாதங்களும் மீட்டல் செய்யவும், நாம் எந்தப் பகுதியில் குறைவாக இருக்கிறோம் என்பதை தெரிந்து கொண்டு கிடைக்கும் கால இடைவெளிக்குள் எம்மைத் தேற்றிக் கொள்ளவும் முடிகிறது. இதுமட்டுமன்றி சாதாரண பரீட்சைப் பெறுபேறுகள் வரும்வரை காத்திராது முன்கூட்டியே உயர்தர பாடங்களை நாம் கற்கத் தொடங்க கூடியதாகவும் உள்ளது.

விளையாட்டுத் துறையில் ஈடுபாடு கிடையாது. கிடைக்கும் ஓய்வுநேரங்களில் கதைப்புத்தகங்கள்படிப்பேன்சிறுகதைகள் கட்டுரைகள்எழுதுவேன். நான்எழுதியஇருசிறுகதைகளுக்கு முதல்பரிசு கிடைத்துள்ளது. வடதமிழீழதமிழ்மொழி கலைத்திறன் செயற்பாட்டுப் போட்டியில் டங்நபற்றி கட்டுரை எழுதியபோது அதற்கு முதல் பரிசு கிடைத்தது. சங்கீதம். வய்ப்பாடு ஆகியவற்றில் ஆண்டு ஒன்பதிலேயே தரம் நான்கு சித்தியடைந்துவிட்டேன்.

கிய 91ஐ பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதற்கும் தேசியத் தலைவரின் பரிசு கிடைக்கவுள்ளதை எண்ணி இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்.

சின்ன வயதிலிருந்தே டாக்டராக வர வேண்டும் என்ற விருப்பம் என்னிடம் உள்ளது. அதனால் உயர்தரத்திற்கு உயிரியல் துறையை (Bio Science) தேர்ந்தெடுக்கப் போகிறேன் என்றார்.

மிகவும் மகிழ்வுடன் காணப்பட்ட சுதர்சனாவின் தாயாரிடம் மேலதிக விபரங்களை அறிந்திடும் நோக்கில் பேச்சுக் கொடுத்த போது...

“எனது நான்கு பிள்ளைகளும் கல்வியே கண்ணாக இருப்பவர்கள் அவர்களுக்கு நேரத்தை வீணாக்குவதில் விருப்பமே கிடையாது. நான் தாயார் என்றவகையில் அவர்களுக்கான சகல கடமைகளையும் நிறைவேற்றிக் கொடுக்கிறேன் அவர்கள் படிப்பிற்காக எதையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

பிள்ளைகள் கெட்டிக்காரர் என்று நான் சொன்னால் அவர்களுக்குப் பிடிக்காது மற்றவர்கள் சொல்ல வேண்டும் என்பார்கள் பாடசாலையில் சகல பாடங்களிலும் முதல் பரிசு பெறுவார்கள். அதற்காக கிடைக்கும் பணத்திற்கு புத்தகங்கள் வாங்குவார்கள். ஒரு பாடத்திற்கு நூறு ரூபா முதல் பரிசாக கிடைக்கும். வருடத்திற்கு ஆயிரத்து நூறு ரூபா வரை சுதர்சனாவிற்குக் கிடைக்கும்

சந்திப்பு: சசிகரன்

பாடசாலையில் சகல ஆசிரியர்களும் அடிக்கடி ஊக்கமளிப்பார்கள். புத்திமதிகள் கூறுவார்கள். கணித ஆசிரியர் “டி” எடுத்தால் மட்டும் போதாது நீங்கள் எல்லோரும் 95 புள்ளிகளுக்கு மேல் எடுக்கவேண்டும் அப்படியான ஒரு சிந்தனையே உங்களிடம் இருத்தல் வேண்டும்' என்பார்.

பரீட்சைகள் நடாத்தப்படுவதும் பரிசில்கள் வழங்கப்படுவதும் மாணவர்களை ஊக்குவிப்பதாகவே அமையும். தேசியத் தலைவரின் பரிசை பெறும் பாக்கியம் கிடைத்நதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்- இத்தகைய ஊக்குவிப்புகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து கற்பதற்கான ஒரு உந்து சக்தியாக எனக்கு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சின்னவயதிலிருந்தே தமிழ்ப் பாடத்தில் நாட்டம் அதிகம். கதைப்புத்தகங்களை சின்ன வயதிலிருந்தே வாசிக்கும் பழக்கம் இருந்ததால் அப்போதிருந்தே தமிழ்மொழியில் தேர்ச்சியுடைய வளாகத்திகழ முடிந்தது. அத்துடன்சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுததூண்டியவையும் அவையே. இதனால் தான் இம்முறை தமிழ்ப்பாடத்திலும் தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளியா

எனது நான்கு பிள்ளைகளுமே புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து-யாழ்ப்பாணக் கல்லூரியில் இலவசமாகவேகல்வி கற்றுவருகிறார்கள்' என்றார்.

பெற்றோரின் ஊக்குவிப்பும் பிள்ளைகளின் விடாமுயற்சியும் அவர்களனைவரதும் எதிர்கால இலட்சியங்களை நிச்சயம் வென்றெடுக்கச் செய்யும் என்ற நம்பிக்கையுடன் அங்கிருந்து நகர்ந்தோம்.




## ஒரு -
## ஆசிரிய மாணவனின் பதில்

(கடந்த 09-12-94 வெள்ளிமஞ்சரியில் வெளியான ஆக்கபூர்வமான சிந்தனை அடிப்படையில் கல்வி வழிநடத்தப்பட வேண்டும் என்ற கட்டுரை தொடர்பாக வெளிவாரியாக பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஒரு ஆசிரிய மாணவனால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை இங்கே தருகின்றோம்)

பிரதம ஆசிரியருக்கு,

கடந்த 09-12-94 மஞ்சரியில் வெளியான “ஆக்கபூர்வமான சிந்தனை அடிப்படையில் கல்வி வழிநடத்தப்பட வேண்டும்” என்ற தலைப்பிலான கட்டுரை கொண்டிருந்த சில நோக்கங்களில் பெரும்பாலான ஆசிரியர்களின் மன நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நான் ஒரு ஆசிரியன் என்ற வகையில் கட்டுரையின் பிற்பகுதியில் எழுதப்பட்ட கருத்துக்களை நான் கண்டிக்க வேண்டியவனாகின்றேன்

விசேட பாடங்களுக்கென பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஜீ. ஏ. கியூ. கலைமாணி பட்டத்திற்காக தங்களை பதிவு செய்துகொள்ள அலைகிறார்கள் என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு ஆசிரியன் தனது கல்வித் தகைமையை உயர்த்திக் கொள்வதாலும் அதனூடாக தனது பொருளாதார நிலையை வளம்படுத்திக்கொள்ள நினைப்பதாலும் மாணவர் சமுதாயம் எவ்விதத்திலும் தீமையடையப் போவதில்லை. இன்று பல நூற்றுக்கணக்கில் ஆசிரியர்கள் தங்கள் வெளிவாரியான உயர்கல்வியைப் பெறுகிறார்கள். இவர்களால்தான் பாடத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படாமல் போகிறது என்பது நகைப்புக்கிடமானது

அத்தோடு விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தங்களது அறிவை பன்முகப்படுத்தி வளர்த்துக் கொள்வதால்எந்த நட்டமும் ஏற்படப்போவதில்லை என்பது கட்டுரையாளருக்குச் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொரு அம்சமாகும். சில பாடங்கள் வெறுமனே சித்தியடைய வேண்டிய நோக்கத்துக்காக

யவர்கள். 1992 இல் நடைபெற்ற தமிழீழப்பொதுக் கல்வித்தேர்வில் அக்கா தேசிய மட்டத்தில் இரண்டாவதாக

ளைத் தீர்த்துக்கொள்வதால் பரீட்சைக்கென விசேடமாக நேரம் ஒதுக்கிக் கற்க வேண்டிய அவசியமேற்படவில்லை.

எம்மைத் தேற்றிக் கொள்ளவும் முடிகிறது. இதுமட்டுமன்றி சாதாரண பரீட்சைப் பெறுபேறுகள் வரும் வரை

தாண்டியவையும் அவையே. இதனால் தான் இம்முறை தமிழ்ப்பாடத்திலும் தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளியா

எதிர்கால இலட்சியங்களை நிச்சயம் வென்றெடுக்கச் செய்யும் என்ற நம்பிக்கையுடன் அங்கிருந்து நகர்ந்தோம்.

# போர் முனையில் யுத்தக் கப்பல்கள்

**7000** வருடங்களுக்கு முன்னர் பழைய எகிப்து நாகரிகத்திலேயே முதன் முதலாக கப்பல் கட்டுபவர்கள் இருந்தார்கள் என சரித்திர ஆய்வுகள் கூறுகின்றது. எகிப்திலுள்ள 'பிரமிட்' (**PYramids**) கட்டுவதற்குத் தேவையான பொருட்களை நைல் நதியினூடாக ஏற்றிக் கொண்டு வருவதற்காக 50-60 தொன் எடையை ஏற்றக்கூடிய அடித்தளம் மட்டமாக உடைய (**Flat Bottomed Vessel**) கப்பல் கட்டப்பட்டது. பின்னர் இதேபோன்ற கப்பல்களை புதிய தேசங்களைக் கண்டு பிடிப்பதற்காக மத்தியதரைக் கடலில் பயணம் செய்வதற்கும் பயன்படுத்தினார்கள். இவை அனேகமாக அமைதிப்பயணமாகவே (**Peaceful Voyages**) அமைந்திருந்தன. ஆனாலும் எப்போதாவது இருந்து விட்டு வெளிநாடுகளில் பிரசாரங்களில் ஈடுபடுத்துவதற்காக துருப்புக்களை ஏற்றிச் சென்றிருக்கிறார்கள்.

## முதற்கடல் யுத்தம் (First Sea Battle)

கி.மு 1300 - 1200 (**B.C.**) ஆண்டுகளுக்கிடையில் கடலில் முதன் முதலாக சண்டை நடந்ததாம். அதனைத் தொடர்ந்து கிரேக்கர் கார்த்தேகஜ் (**Carthage**) உரோமாபுரி ஆகிய நாட்டவர் கடலில் அடிக்கடி கடற் போர் புரிந்தனர்.

கார்க்கினியன்ஸ் (**Carthaginians**) தான் கடலில் அடிக்கடி பிரயாணம் செய்பவர்கள் என்பதால் அவர்களுடைய யுத்தக்கப்பல்கள் அடிக்கடி கடலில் பிரயாணம் செய்யவும் கடற்பாதுகாப்பில் ஈடுபடவும் நேர்ந்தது.

கி.பி. 14ம் நூற்றாண்டில் தான் 'யுத்தக்கப்பல்' (**Warship**)முதன் முதலாக தோற்றம் பெற்றது. வெடி மருந்து கண்டு பிடிக்கப்பட்டது தான் இந்தத் தேவைக்கு உந்து சக்தியாக அமைந்தது. அது வரையில் வியாபாரத்திற்குரிய கப்பல்களை யுத்தக்கப்பல்களாகப் பயன்படுத்தியதை விட்டு போர் புரிவதற்கேற்ற யுத்தக் கப்பல் விசேட வடிவத்தில் தயாரிக்கப்பட்டது.

கப்பலின் அளவு எப்போதுமே ஓர் முக்கியமான விடயமல்ல என்பது புலனாகியது. பெரிய கப்பலாக இருந்தால் நிறையவே துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் காவிச்செல்ல முடியுமென்பதால் அதனுடைய அழிவுப் பலம் (**Destructive Power**) மிகவும் அதிகமானதாக இருக்கும என நினைத்தார்கள். ஆனால் பெரிய கப்பலை கட்டியவிழ்ப்பதில் பெரும் சிரமமும் **Difficult to Manoeuvre**) மற்றும் தனக்கேற்ற சரியான இடத்தில் (**Right Position**) நிற்கும் போது தான் அவற்றின் துப்பாக்கிகள். பயன்படுத்தக்கூடியனவாக இருந்தன. நவீன தொழில் நுட்பம் நிறைந்த எந்தத் திசைக்கும் நினைத்த மாத்திரத்தில் திருப்பக்கூடிய நீண்ட தூர துப்பாக்கிகளைப் போன்று **Revolving Gun Turret**) பெரிய நிலையான இடத்தில் பொருத்தப்பட்ட பீரங்கிகள் (**Cannon**) ஒரு குறிப்பிட்ட இலக்கை மிக வேகத்தில் தாக்கி வெற்றி பெறப் பயன்படுவதில்லை. இவற்றுடன் பாரிய யுத்தக் கப்பலாயின் யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டாலோ அல்லது பிடிபடுகின்றபோது எதிரியிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவது கடினமாகவே இருந்தது.

இதனடிப்படையிலேயே வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப பல்வேறு அளவுகளில் சிறியது முதல் கொண்டு பெரியது வரை யுத்தக்கப்பல்கள் தயாரிக்கும் எண்ணம் வலுப்பெற்றது.

உதாரணமாக:

★ 1500 தொன் எடையுடையதும் 90 -100 வரையிலான பீரங்கிகள் கனரக ஆயுதங்களைக் கொண்டிருப்பின் அது முதற் தரமான (**First Rate**) யுத்தக்கப்பல் என்றும்,

★ 82-90 கனரக ஆயுதங்களைக் கொண்டிருப்பின் அது இரண்டாம் தர (**Second Rate**) கப்பல் என்றும் தரம் பிரிக்கப்பட்டது.

★ ஆகச் சிறிய யுத்தக் கப்பல் 300 தொன் எடையுடையதாகவும் 26 - 32 கனரக ஆயுதங்களைக் கொண்டதாகவும் தயாரிக்கப்பட்டது.

ஆனாலும் ஒரு குறிப்பிட்ட ரக யுத்தக்கப்பல்களே யுத்தத்தின் போது முன்னணி நிலைகளுக்கு (**Line of Battle**) அனுப்பப்பட்டன. 17-ம் நூற்றாண்டில் 60-74 கனரக துப்பாக்கிகளைக் கொண்ட மூன்றாம் ரக கப்பல்களே இதற்கென பயன்படுத்தப்பட்டன. இது 'முன்னணி நிலை யுத்தக் கப்பல்கள்' (**Line of Battle Ships**) என அழைக்கப்பட்டு தற்போது அந்தப் பெயர் 'யுத்தக்கப்பல்' எனத் தோற்றம் பெற்றது.

முதற்தர யுத்தக் கப்பல்களும் இரண்டாம் தர யுத்தக் கப்பல்களும் விசேட பயணிகளுக்கான கப்பல்களையும் வர்த்தகக் கப்பல்களையும் பாதுகாக்கவும் எதிரியின் துறைமுகத்தை தடை செய்யவும் பயன் பட்டது. சிறிய கச்சிதமாக அமைக்கப்பட்ட யுத்தக் கப்பல்களே திடீரென எதிரியின் கப்பலைக் கூட மின்னல் வேகத்தில் தாக்கியழிக்கக்கூடிய பலத்தையும்கொண்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

மரங்களால் செய்த கப்பல்களிலிருந்து நீராவி இயந்திரம் (**Steam power**) 1800-ன் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து கடற்படையினரும் கப்பலோட்டிகளும் நல்ல பயிற்சியும் பெற்றார்கள்.

**டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன்**

இதனைத் தொடர்ந்து சுழலக்கூடிய கனரக துப்பாக்கியும் (**Revolving Gun Turret**) வெடிபொருளை அல்லது எறிகணையை உந்தி எறிவதற்கும் (**Propeller**) உரிய உபகரணம் கண்டு பிடிக்கப்பட்ட 'புதிய யுகம்' தோன்றியது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இரும்பின் பாவனை நடைமுறைக்கு வந்ததும் (**Great Ironclads**) இரும்பின் துணைகொண்டு பாரிய துப்பாக்கிகளையும் கனரக ஆயுதங்களையும் விரும்பிய முறையிலும் தேவைக்கேற்பவும் வடிவமைத்து பொருத்தப்பட்டது. மேலும் தாய்க் கப்பலுக்குத் துணையான சிறிய கப்பல்களையும் பயன்படுத்துவதனால் இந்த சிறிய கப்பல்கள் எதிரிகளின் கப்பல்களை முறியடிப்பதற்கும் வெ'ற்றி கொள்வதற்கும் பெரிதும் பயன்பட்டது. 1-ம் உலக மகாயுத்தத்தின் போது இந்தக் கப்பல்கள் யுத்தத்தில் முதன் முதலாக ஈடுபடுத்தப்பட்டு பெரும் வெற்றிகளைப் பெற்றன.

அடுத்த 30 - 40 ஆண்டுகளுக்கு யுத்தக் கப்பல்களே கடலை ஆட்சி செய்தன. ஆனால் இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவுக்கு வந்ததும் யுத்த விமானங்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் நன்கு வளர்ச்சி பெற்று விட்டதனால் அவற்றின் ஆதிக்கம் மேலோங்கியது. மேலும் நீராவி இயந்திரங்களை அணுசக்தி இயந்திரங்கள் (**Nuclear Propulsion**) மாற்றீடு செய்தன. விமானங்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் பலம் பெற்றதற்கு இதுவும் ஓர் அடிப்படைக் காரணமாக அமைந்தது. மேலும் இவை நெறிப்படுத்தப்படுகின்றஎறிகணை (**Guid d Missiles**) நீர்மூழ்கியை அழிக்கும் அதிவேக (**High Speed Frigates for Anti-submarine Warfare** எதிர் நீர் மூழ்கிக் கப்பல் அங்கீகரிக்கப்பட்ட நீர்மூழ்கிக்கப்பல்கள்(**Conventional Submarines**) வானூர்திகளைக் காவிச்செல்லும் கப்பல்களும் விமானங்களும் (**Helicopter Carriers**) கமாண்டோ துருப்புக்களை காவிச் சென்று தரையிறக்கப் பயன்படும் கப்பல்கள் (**Commando Carriers for Troo-**

(2-ம்பக்கம் பார்க்க)

மும் ஏற்படப்போவதில்லை என்பது கட்டுரையாளருக்குச் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொரு அம்சமாகும். சில பாடங்கள் வெறுமனே சித்தியடைய வேண்டிய நோக்கத்துக்காக கற்றலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படினும் பொருளியல், புவியியல் துறைகளின் பயன்பாடு இவரினால் இதுவரை அறியப்படமுடியாத ஒன்றா என்ற சந்தேகமே எனக்கு எழுகின்றது.

வெளிவாரியாக கற்றலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் தமதுசொந்த லீவுகளையும், பொது விடுமுறை நாட்களையும் அறிவுத் தேடலுக்காக செலவழிக்கும்போது ஏனைய பல ஆசிரியர்களின் கற்பித்தல்தான் திருப்தியானது என கட்டுரையாளர் கருதுவது எந்த வகையில் பொருந்தமானது?

வெளிவாரிக் கற்றலால் இவ்வாறு மாணவர் கல்வி சீர்கெட நேருமானால் இவ்வாறான பிரிவைத் தொடங்கிய யாழ்.பல்கலைக் கழகம் தவறு செய்துள்ளதா? அல்லது இதற்கு அனுமதியளித்துள்ள மானிய ஆணைக்குழு தவறு செய்துள்ளதா? அல்லது கல்விக் கொள்கையின் தவறா? அவ்வாறானால் பட்டப் பின் கல்வி டிப்ளோமாவுக்கு கல்வித் திணைக்களம் ஒரு மாத படிப்பு லீவு வழங்குகிறதே, இதனால் மாணவர் கல்வி பாதிக்கப்படவில்லையா?

பட்டத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் எல்லோரும்உயர் வகுப்பில் தான் கல்வி கற்பிக்க வேண்டும் என்று அடம் பிடிக்கிறார்கள் என கட்டுரையாளர் கூறுவது முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல, அவ்வாறு அடம்பிடிக்காத ஆசிரியர்களும் நிறையவே உள்ளனர்.

தொடர் கல்வியானது விசேட பயிற்றப்பட்ட துறையிலேயே பெறப்பட வேண்டுமென்பது எல்லா வேளைகளிலும் நடைமுறைச் சாத்தியமற்றது. உதாரணமாக உடற்கல்வித் துறையில் தொடர் கல்வி வாய்ப்புப் பெற தகுந்த வளங்கள் எமது பிரதேசத்தில் இல்லை என்பது கட்டுரையாளருக்கே தெரியும். இந் நிலையில் அவ்வாறான ஒருவர் வேறுதுறையில் பட்டம் பெறுவது எவ்வகையில் தவறாகும்? 2000-ம் ஆண்டில் எல்லா ஆசிரியர்களும் பட்டதாரிகளாக வேண்டிய தேவை ஏற்படலாம். இந்த நோக்கத்திற்காக அரசாங்கமும் பல வாய்ப்புக்களைத் தருவது கட்டுரையாளருக்கு தெரிந்திருக்கும் என நம்புகின்றேன்.

ஆசிரியரும் சரி, போதனாசிரியரும் சரி தம்மை நிகழ்காலத்திற்கேற்ப இசைவாக்கி கொள்ள வேண்டும் என இவர் குறிப்பிடுகின்றார். அரசின் கல்விக்கொள்கைக்கேற்ப தனது கல்வி நிர்வாக சேவை பட்டத்தை பெற்றுக்கொண்ட கட்டுரையாளர் தனக்கொரு நியாயம், பிறருக்கொரு நியாயமாக நடந்து கொள்கின்றாரே.

வாழ்க்கைத்திறன் பாடத்தில் விசேட பயிற்சி பெற்ற இவர் ஏன் அதே துறையில் தொடர்கல்வியை மேற்கொள்ளவில்லை? அது முடியாத காரியம் என இவர் தீர்மானித்துக் கொண்டாரா? இதற்கு கட்டுரையாளர் தான் பதில் கூற வேண்டும்.

-வெளிவாரியாக கற்கும் ஆசிரிய மாணவன்

# 7-ம் ஆண்டு நினைவலைகள்



## அஞ்சலித்து நடக்கின்றோம்!

அயல் நாட்டைச் சொர்க்கமென எண்ணி நாளும்
ஆயிரமாய் மனிதர்படை எடுக்கும் வேளை!
துயர்படிந்த தாயகத்தின் அவலம் போக்க
துடிப்போடு அயல்நாட்டின் சுகங்கள் நீக்கி
உயிரனைய தமிழீழம் நோக்கி வந்தே
உறுதியுடன் களத்தினிலே புலியாய் நின்றாய்
அயராது செயல் புரிந்தாய் மாணவர்க்கும்
''அருந்தலைவர்'' நெறிவழியே ஆக்கம் என்றாய்.

இனவாதச் சிங்களத்துப் படைகளோடு
இரவுபகல் சமராடி! மக்கள் நெஞ்சில்
கனல்கின்ற விடுதலைக்கு காற்று ஊதி
கடமையுடன் ஒன்றித்து நின்ற வேளை
மனதினிலே வஞ்சனையைச் சுமந்து இங்கே
வந்தபா ரதப்படைசெய் கொடுமை சாய்க்க
முனைப்போடு நீசூழன்று வென்று வீழ்ந்தாய்
முரளியெனும் முழுநிலவே உளத்தில் பூத்தாய்!

அழகுவிழி நீதிறந்து பார்ப்பாய்! உந்தன்
அடிச்சுவட்டில் அண்ணனுடன் ஆயிரமாய்
தழனைய விழியுடனே இளையோர் கூட்டம்
தாயகத்தை மீட்க நடைபயிலுகின்றார்
விழலுக்கு இறைத்தநீர் இல்லை! உன்போல்
வீரர்தம் செங்குருதி விளைவைக் கூட்டும்!
அழிவில்லை! உறுதியுடன் ஏழாம் ஆண்டில்
அஞ்சலித்து நடக்கிறோம் விடிவை நோக்கி

-நிலா தமிழின் தாசன்

## முரளியை நினைத்திடுவோம்

தமிழீழக் கல்வியோடு தன்னை இணைத்திருந்த
புலிவீர முரளியை நினைப்பதன் நோக்கமென்ன!?
தமிழர் பலர், தம்நிலை மறந்து - தரங்கெட்டு
இவ்வுலகின், அடிமைகளாய், அகதிகளாய்
'அந்நியத்தில்' மகிழ்ந்தவேளை -
'விசா' கிடைக்கா விட்டாலும்
மேற்கின் 'பனி'ச் சுகத்தை உள்ளுக்குள் பெய்து
உவந்து சுவைத்த வேளை ஒரு மனமோ..!
அங்கிருந்தும்சுகிக்காமல் -
இங்கெழுந்த வேள்வித்தீக் கனலை உள்விழுங்கி
தன்னைப் புடமிட்டு 'அண்ணன்' வழி தொடர
பாய்ந்து வந்து 'இணைந்த' தென்றால்...!!
அந்த மனத்தின் 'தாயகத்துத் தாக' மென்ன !!??
அதுவுமன்றி,
'இதமான' தேசத்தின்கல்வியை விட்டு வந்து -
உரம் பெற்ற கைகளிலே உறுதித்தணலேந்தி
இனவாதப் பேயின் ........
வல்லரசுப் பூதத்தின் ......
உடல்கிழிக்கும் செயல்களிலும் உறக்கமின்றி உழைத்தபடி;
எங்கள் தேசத்தின் எரியும் கனலிடையே
நீட்டோலை படிப்பதற்கும்



எங்கள் தேசத்தின் எரியும் கனலிடையே
நீட்டோலை பெறப் படிப்பதற்கும்
வழிபல வகுத்த தென்றால் .. ......!!!
தமிழீழ மாணவர்மேல்
கொண்டிருந்த வாஞ்சை யென்ன... !!!???
இதனாற்றான்,
இந்தமண் இன்றளவும் - இவன் செயலை நினைக்கிறது.
இனியும்,
கல்வியே கருத்தனமாய் கொண்டோரும்
எம்மண்மேல் காதலினைச் சொரிவோரும்
என்றும்...என்றென்றும்...
முரளியை நினைத்திருப்பர்.

ஆக்கம்: குழையூரன் ச. மார்க்கண்டு
(யாழ் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி ஆசிரியர்)

# மேஜர் முரளி

## வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம்

ஆவரங்கால்

பிறப்பு:

1958 - 10 - 06

வீரச்சாவு:

1987 - 12 - 23

## கூடுகட்டத் துணிந்த குயில்

கூடுகட்டத் தெரியாத கேடுகெட்ட குயில்கள் காக்கையின் கூடே கதியென்று கிடப்பது வழமை. ஆனால், அந்தக் கேடுகெட்ட வாழ்வை வெறுத்துத் தாமே கூடுகட்டி வாழ குயில்கள் புறப்படுவது புதுமை.

அவ்வகையில் மேஜர் முரளி எனப்படும் வேலுப்பிள்ளை இரட்ணசிங்கமும் கூடுகட்டப் புறப்பட்ட புரட்சிக்குயில் ஆவான்

குளுகுளுப்பான ஐரோப்பிய நாடொன்றில் தங்கியிருந்த முரளிக்கு தாயகத்தில் தனது மக்களுக்கெதிராக மூட்டப்பட்ட ஒடுக்குமுறை நெருப்பின் தகிப்பைத் தாங்கியிருக்க முடியவில்லை.

சோசலிச சனநாயகக் குடியரசு என்று தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள சிறிலங்காவின் இன ஒடுக்கு முறையின் கோர வடிவத்தை அம்பலமாக்கும் முயற்சியில், தான் தங்கியிருந்த நாட்டிலேயே ஈடுபட்ட முரளி பின்னர் தன்னை ஒரு முழு நேரப் போராளியாக்கி தனது தாயக மீட்புப் பணியினைத் தொடர விரும்பியவனாய் இந்தியா சென்று போர்ப் பயிற்சியை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பினான்.

சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்து வீதிகளில் ரோந்து வந்த அந்த நாட்களில்தான் இவன் மக்களுடன் அன்பான உறவுகளை வளர்த்துக் கொண்டு, தேச விடுதலையின் அவசியம் பற்றியும் அதற்காய் மக்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பற்றியும் தெளிவு படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தான். இராணுவத்தினர் அங்கும் இங்கும் புலிகளைத் தேடி அலையும் வேளைகளில் கிடைக்கும் இடைவெளிகளூடாக இவனது துவிச்சக்கரவண்டி நுழைந்து தன் பணியினை மேற்கொள்ளும்.

இருளிலும், அதிகாலைப் பொழுதுகளிலும், வாழைத்தோட்டங்கள், செம்மண் வரப்புகள், குச்சொழுங்கைகள் வழியாக தேசவிடுதலைக்கான சுமைகளைச் சுமந்து செல்லும்.

பிரதேச ரீதியாக அரசியல் வேலைகளைச் செய்து வந்த முரளி. 1985ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பொறுப்பை ஏற்று மாணவர் மத்தியில் எமது தேசியத் தலைவர் அவர்களின் உயரிய நோக்கின் படி கல்வி வளர்ச்சியையும் தேசப்பற்றுணர்வையும் ஊட்டி நின்றான். ஒவ்வொரு மாணவர்களுடனும் - அன்புடனும் தோழமை உணர்வுடனும் பழகி அரசின் தமிழ் மாணவ சமுதாயத்தின் கல்விக் கெதிரான செயற்பாடுகளை விளக்கி அவர்களை விடுதலைப் போராட்டத்துடன் இணைய வேண்டியதன் அவசியத்தையும் உணரச் செய்தான்.

முரளி அடிக்கடி கூறிக்கொள்வான் ''சிறிலங்காவின் இராணுவ இயந்திரங்கள் தமிழீழ மண்ணில் இருந்து அகற்றப்பட்டால்தான் தமிழீழம் தன் இறைமையுடன் மீண்டும் நிமிர்ந்து நிற்கும்'', என்று தனது சொல்லுக் கேற்ப முரளி பல இராணுவத் தாக்குதல்களில் பங்கு கொண்டான். 23-03-1987இல் யாழ். பொலிஸ் நிலையத்தின் மீது நடத்தப்பட்ட அதிரடித்தாக்குதலிலும் தன்னை இணைத்துக் கொண்டு வீரத்தை வெளிப்படுத்தியபோது விழுப்புண்களைச் சுமந்து கொண்டான்.

இறுதியில் அமைதிகாக்கவென நுழைந்து அநியாயம் பண்ணிய இந்தியப் படையினருடன் மூண்ட போரில், கோப்பாய் பகுதியால் முன்னேறிய இந்திய இராணுவத்தை எதிர்த்து நின்றபுலிகளணிக்கு இவன்தலைமை தாங்கி நின்று சமர் புரிந்தான்.

இந்திய இராணுவம் குடாநாட்டில்தன் நடமாட்டத்தைத் தொடங்கிய பின்னரும் தனது தீவிரமான போராட்டப் பணியினைத் தொடர்ந்த முரளி 23-12-1987 அன்று அதிகாலை தனது சொந்த மண்ணிலேயே சுற்றி வளைத்து நின்ற இந்தியப் படையினருடன் சளைக்காது போராடி தன்மானத்துடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டான். அவனுடன் அன்று இணைந்து நின்ற அவனது ஒன்பதுதோழர்களும் தமது குருதியினால் மண்ணை நனைத்தபடி தமது தோழனுடன் வித்தாகினர். ஏனைய மாவீரர்களைப் போலவே முரளியையும் இந்த மண் என்றும் மறக்காது.

## விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, தமிழீழம்.

(சி-10982)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளைநூலகம்.

# மின் உற்பத்தியின் நம்பிக்கை நட்சத்திரமாக சூரிய மின் உற்பத்தி நிலையங்கள்

சூரியனும் அது பிறப்பிக்கும் சக்தியும் மனிதனின் ஆய்வுக்கு உரிய பொருளாகி பல நூறு ஆண்டு காலமாகி விட்டது. உலகின் தோற்றத்திற்கும் அதன் இயக்கத்திற்கும் சூரியனின் இன்றியமையா தன்மையை மனிதன் உணர்ந்து கொண்ட நிலையில் மிகப் பிரமாண்டமான சக்தியைக் கொண்ட சூரியனின் சக்தியைப் பயன்படுத்துவது குறித்து ஆய்வுகள் பல வருட காலமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. சூரியனிலிருந்து நேரடியாகப் பெறப்படும் வெப்பசக்தியைப்பயன்படுத்தி வெவ்வேறு மாற்று சக்திகள் பெறப்படுகின்றன. சூரிய சக்தியிலிருந்து மின்சக்தி பெறும் வழிமுறைகளும் நீண்ட காலமாகவே பயன்பாட்டுக்கு வரத் தொடங்கியுள்ளன.

இவ் வகையிலே சூரிய மின் கலங்கள் (Solar Cell) என்பன நேரடியாக சூரிய ஒளியிலிருந்து மின்னைத் தயாரிக்கும் சாதனமாக காணப்படுகிறது. இந்த சூரிய மின் கலங்கள் மனிதனின் மின் தேவையின் மிகச் சிறு பகுதியையே பூர்த்தி செய்யக் கூடிய நிலையில் இன்று இருப்பினும் காலப்போக்கில் இது பெருமளவு மின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த சூரிய மின்கலங்களை ஆக்குவதில் அடிப்படையாக விளங்குபவை குறைக்கடத்திகள் (Semiconductors) இந்தக் குறைக்கடத்திகள் சூரியமின் கலத்தை ஆக்குவதில் மட்டுமல்ல இலத்திரனியல் சாதனங்கள் தயாரிப்பதிலும் மூலப் பொருளாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது தயாரிக்கப்படும் ஒரு சிறிய சூரிய மின் கலத்திலிருந்து மிகக் குறைந்த அளவு மின்சக்தியை மட்டுமே பெறமுடியும். இந்த மின்சக்தியின் அளவு விழும் சூரிய ஒளியின் செறிவிலும் மின்கலத்தின் முகப்புப் பரப்பிலும் தங்கியுள்ளது எனினும் மின்கலத்தின் அளவை அதிகரிப்பதில் பல தொழில் நுட்பச் சிக்கல்கள் உள்ளமையால் சாதாரணமாக சூரிய மின்கலமானது வட்ட வடிவிலான சிறுசிறு வில்லைகளாக ஆக்கப்பட்டு அவை தொடராக இணைக்கப்பட்டு தேவையான மின்சாரம் பெறப்படுகிறது- இவ்வாறு ஒரு தொகுப்பாக பெறப்பட்ட அமைப்பை சூரிய மின்கலத் தொகுப்பு (Solar panel) என அழைக்கின்றனர்.

ஆரம்ப காலத்தில் சிலிக்கன் ஜேமானியப் படிகங்கள் (Crystal) சூரிய மின்கலத் தொகுப்புக்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் இவை செலவு கூடியனவாகும். இன்று சூரிய மின்கலத் தொகுப்புகள் பயன்பாட்டுக்குத் தக்க வாறும் கிடைக்கும்தொழில் நுட்பத்துக்கு தக்கவாறும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இன்றைய நிலையில் கட்மியம் சல்பைட், செப்பு சல்பைட் என்பவற்றைப் பயன்படுத்தி இச்சூரிய மின் கலங்கள் உருவாக்கப்படுகின்றன. ஒரு கண்ணாடித் தட்டில் ரின் ஒட்சைட்டுப் படலம் பூசப்பட்டு அதன் மேல் கட்மியம் சல்பைட்டும்செப்புச் சல்பைட்டும் படலங்களாக பூசப்படுவதன் மூலம் இம் மின்கலங்கள் உருவாக்கப்படுகின்றன சூரிய ஒளியானது கண்ணாடியூடாகச் சென்று இப் படலங்களில் விழும் போது மின்சாரம் உற்பத்தியாகிறது.

இம்மின் கலங்களில் இவ் இரசாயனப் பொருள்கள் மிக மெல்லிய படலமாகபூசப்படுவதனால் உற்பத்திச் செலவு குறைவாக உள்ளது. மேலும் இச்சூரியக் கலங்கள் ஏறத்தாள 20 ஆண்டுகள் வரை பயன் படக் கூடியனவாக உள்ளன.

இவ்வாறு மென்படலங்கள் சூரிய மின் கலங்களுக்,ப்பயன்படுத்தப்படஆரம்பிக்கப்பட்ட பின்னர் சூரிய மின் கல உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ளது. மேலும் பல்வேறு ஆராய்சிகளின்மூலம் கட்மியம் ரெலூரைட்டு, கல்லியம் ஆசனைட்டு, கல்லியம் பொஸ்பைட்டு, இன்டியம் பொஸ்பைட்டு போன்ற இரசாயனங்கள் இச் சூரிய மின்கல உற்பத்திக்கு மூலப் பொருட்களாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன அத்துடன் படிகமற்ற நிலையிலுள்ள சிலிக்கன்களும் இன்று இக் கலங்களை உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன.

## சி. சிவபாலன்

இதேவேளை ஜெநசலத்தில் உள்ள ஹீப்புரூ பல்கலைக்கழகத்தில் சூரிய சக்தியை சிறந்த முறையில் பயன்படுத்தி கூடிய அளவில் மின் உற்பத்தி செய்யக்கூடிய புதிய பொருள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர் இப் புதிய பொருள் பிளாஸ்டிக், மற்றும் கண்ணாடிகளால் ஆனவையாக உள்ளன. ஹீப்புரூ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானியான ரெனிடா ரெயில்பெல்ட் இப் புதிய பொருளைக் கண்டுபிடித்துள்ளார். இப்புதிய பொருளினால் வீடு மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான மின்சக்தியைப் பெறலாம் என நம்பப்படுகிறது.

ஏனைய மின்கலங்களைவிட மூன்று மடங்கு மின்சக்தியை பிறப்பிக்கக்கூடியதாக இது உள்ளது.

இந்த சூரிய மின் கலங்களைப் பாவித்து தொடர்பற்ற நிலையிலுள்ள கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்க முடிகிறது. இவ்வாறான இடங்களில் உள்ள தொலைத் தொடர்பு சாதனங்களுக்கு மின்வழங்குவதில் சூரியமின் கலங்கள் பெருமளவில் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. சூரிய மின்கலமானது சூரிய ஒளி குறைவாக உள்ளபோதும் போதிய அளவு செயற்பாடு உடையதாக காணப்படுவதால் அதிக வெய்யில் இல்லாத துருவப் பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்க வழி செய்கிறது.

ஆரம்பகாலத்தில் இந்தச் சூரிய மின்கலங்கள்விண்வெளி ஆய்வுகூடங்களுக்குத் தேவையான மின்சக்தியைப் பெறுவதற்காகவே அமைக்கப்பட்டன இன்று இம் மின்கலங்களைப் பயன்படுத்தி இயங்கும் கணக்கிடும் கருவிகள் (Calculator) சாதாரணமாக பாவனையில் உள்ளன

இந்தியா, அவுஸ்ரேலியா, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தொடர்பு ஏற்படுத்துவதில் சிரமமாகவுள்ள தனிக்கிராமங்களில் மின்சார தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சூரிய மின் கலங்கள் பயன்படுகின்றன.

சூரிய மின்கலங்களைப் பயன்படுத்தி இயங்கும் சைக்கிள்கள், கார்கள் என்பன ஆராய்ச்சி நிலையில் வெற்றியைத் தந்துள்ளன. பகல் முழுவதும் இம் மின்கலங்கள் மூலம் பெறப்படும் சக்தியைச் சேமித்து வைத்து இரவு நேரங்களிலும் பயன்படுத்தக் கூடிய அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நீர் மின் உற்பத்தி நிலையங்கள், அணு மின் நிலையங்கள் போன்றே சூரிய சக்தி மின் நிலையங்களும் நிறுவப்பட்டு வருகின்றன ரஷ்யாவிலும் இத்தாலியிலும் இவ்வாறான மின்நிலையங்கள் பல காணப்படுகின்றன. இங்கே ஒவ்வொன்றும் சுமார் 500 வாற்று மின்சக்தியை வழங்கக் கூடிய சூரிய மின்கலத் தொகுப்புகள் பல அமைக்கப்பட்டு மின்சக்தி பெறப்படுகிறது

சூரிய மின்சக்தி நிலையங்கள் பெருமளவில் நிறுவப்படாமைக்குஇம்மின்கலங்களை அமைப்பதில் உள்ள செலவு மிகவும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. அந்துடன் சூரியனிலிருந்து பெறப்படும் சந்தியின் பெரும் பங்கு காற்று மண்டலம் அதிலுள்ள தூசு மேகங்கள் என்பவற்றால் உறிஞ்சப்பட்டு வீணாகிப்போகிறது இச் சூரிய மின் கலங்களிலிநந்து மின்னை உற்பத்தி செய்யும் போது சாதாரணமாக ஒரு கிலோ வாற்றுமின்னை உற்பத்தி செய்ப சுமார் 30ரூபா செலவாகிறது. இதனால் இவற்றை சாதாரணமாக பயன்படுத்தமுடியாத நிலை உள்ளது. ஆனால் இச் செலவைக் குறைப்பதற்கும் சூரிய சக்தியை பெருமளவிற்கு மின்சக்தியாக்குவதற்கான முறைகளும் இன்று ஆராய்ச்சி நிலையில் உள்ளன.

சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களை விண்வெளியில் அமைப்பதன் மூலம் சூரிய சக்தியின் பெரும் பகுதியை மின் சக்தியாக மாற்றலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதன் மூலம் பூமியில் கிடைப்பதை விட 40 சதவீதம் அதிகரித்த மின் சக்தியைப் பெற முடியும் எனவும் இவர்கள் கூறுகின்றனர்

இதற்காக மிகப் பெரிய சூரிய மின்கலத் தொகுப்புக்களை 25 கிலோ மீற்றர் நீளமுள்ள சுவராக விண்வெளியில் நிறுவி பூமியைச் சுற்றி ஒரு நிலையான வட்டப்பாதையில் சுற்றிவரச் செய்வதன் மூலம் மின்னை உற்பத்தி செய்யலாம் என்ற யோசனையும் உள்ளது இவ்வாறான இரண்டு மின் நிலையங்களை பூமியிலிருந்து 12600 கிலோ மீற்றர் தொலைவில் அமைத்தால் 24 மணி நேரமும் மின் சக்தி பெறுவது சாத்தியம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்

இவ்வாறு உற்பத்தியாகும் மின் சக்தியானது நுண் அலைகளாக மாற்றப்பட்டு பூமிக்கு அனுப்பப்படும் இவை தரையிலுள்ள 'அன்ரனாக்கள்' மூலம் பெறப்பட்டு மீண்டும் மின் சக்தியாக மாற்றப்படும் ஆனால் சக்தி வாய்ந்த சில நுண் அலைகளானது மனிதனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை என்பதால் இம்முறை குறித்து பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சிலர் சந்திரனில் இவ்வாறான சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கலாம் எனவும் யோசனை கூறியுள்ளனர். அது அடுத்த நூற்றாண்டில் சாத்தியமாகலாம் என்றும் நம்பப்படுகின்றது.


## 45-ம் நாள் நினைவலைகளோடு
### நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தாயின் மடியில் முத்தாக
16 03-1976

தாயக மண்ணில் வித்தாக
0?-11-1994

### லெப். ஆதிரை
(கவிதா சிவஞானம்)

தொலைந்து போகாதோ
இனிவரும் சோக நாட்கள்?
மீண்டும் வராதோ
உன்னோடு நாம் வாழ்ந்த
இனிய நாட்கள்?

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்கொண்ட எம் செல்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதலளித்து உதவிகள் நல்கிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (23-12-1994) நடைபெறும் 45-ம் நாள் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு இந்நாளில் எமது அன்புச் செல்வத்தினுடைய ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு சக போராளிகள், உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி தெற்கு.

-குடும்பத்தினர்
(10431)



## உங்கள் இல்லங்களில்
## உதயமாகிறது புதிய நாள்

1995




★

தமிழ்த்தாய் நாட்காட்டியை
வாங்குவதின் மூலம்
அந்த நாளை ஆரம்பியுங்கள்

★

புலரும் ஒவ்வொரு நாளிலும்
புதிய அறிவைப் பெறவும்

★

- போராட்ட நினைவுக் குறிப்புகள்
- அறிவியற் கருத்துகள்
- தமிழ்ப்பெரியார் நினைவு நாட்கள்
- வரலாற்றுத் திருப்புமுனைச் செய்திகள்

கொக்குவில் இரகுநாத ஐயர் அவர்களின் வாக்கிய பஞ்சாங்க
கணிப்பீட்டு நாளாந்த குறிப்புகள்

தேசியத் தலைவரின் அழகிய படத்துடன் தமிழ்த்தாய் நாட்காட்டி.
நாட்காட்டியென்பது சுவரில் தொங்கும் சித்திரமல்ல;
இதயத்தில் பதியும் எண்ணங்களுடன்...

தமிழ்த்தாய் நாட்காட்டி

(சி-10981)


## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் அன்பு**
(பத்திநாதர் அமலராசன்)

தோற்றம் 1966 05-03 | களத்தில் களப்பலி 1988-12-23

மா வீரனே!
மறைந்தது ஆண்டுகள் ஆறு
மாறுமா உன் அன்பு
மறையுமா உன் நினைவு
மாறாது மறையாது உன் பாசம்
தமிழ் மண் மீது கொண்ட பாசத்தினால்
வீரனாய் விரைந்தாய் களத்திலே
களம் பல கண்டு காவியமானாய்
காவியத்திற்கு காரணம் சமூக-
விரோத கும்பல்களினால் சுட்டி
சயனைட் அருந்தி காவியம் படைத்தான்
காலங்கள் ஓடி மறைந்தாலும்
மாறாது மறக்காது உன் நினைவு.

உன் பிரிவால் வாடும்
தாய், சகோதரன்,
சகோதரிகள், அண்ணிகள்,
மச்சான்மார், மருமக்கள்.

சின்னன் தோட்டம்,
பருத்தித்துறை.

(10472)

## கண்டெடுத்த பொருள்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வீதியில் நாலாயிரம் ரூபா பெறுமதியான நகை ஒன்று அன்பரால் கண்டெடுக்கப்பட்டு ஆனந்தா ஆச்சிரமத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

செ. ராமதாஸ்
ஆச்சிரமத் தொண்டர்களுக்காக
(9869)

## A/L 95

## கணக்கியல்

புதிய பிரிவு ஆரம்பம்
24-12-1994 2.00 மணி

ஆசிரியர்
D. SAM

அலகு 1இல் இருந்து ஆரம்பமாகி அனைத்து பாடத்திட்டமும் முடிக்கப்படும்.

## D. M. I.

233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10958)

தமிழீழ மக்களிற்கு ஓர் நற்செய்தி

## மலிவு விற்பனை

பட்டுச் சேலைகள்
பட்டு வேட்டி
சாறி வகைகள்
மாட்டீன் ஷேட்ஸ்
சூட்டிங்ஸ்
சகலவிதமான பிளவுஸ் பீஸ் வகைகள்

## சோதி புடைவையகம்

14, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்

கிளைஸ்தாபனம்: சோதிபுடைவையகம்
இணுவில்

நத்தார் நன்னாளிலே
திடீர் விருந்தினருக்கு
விருந்தளிக்க தினமும்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா தரும்

நத்தார் வெகுமதி நாவிற்கு சுவையும்

நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதி மிக்க சுகாதாரமான பண்டங்களை, நத்தார் வெகுமதியாக தினமும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளவும். அத்துடன் எமது விருந்தகத்தில் ஒன்று கூடி உண்ணலாம், **விசேஷ லம்பாரிஸ் புரியாணி**, கோழி புரியாணி (நெய்க் கலவை), ஆட்டிறைச்சி புரியாணி (நெய்க் கலவை), **Sea Food Mixed Grill** புரியாணி, பிறைட் றைஸ் (எல்லா இறைச்சி வகைகளுடன்), நூடில்ஸ் இன் **Soya Souce**

**Rice & Curry With Special Meat**

வீட்டிற்கு வெளியிலே ஒரு மனை
அது ஜெசித்தாரா தரும் மனை

தினமும் காலை 10.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை திறந்திருக்கும்.

24, 25, 26-ம் திகதிகளில்
இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உலகம்
ஜெசித்தாரா
எமக்கு வேறு கிளைகள் இல்லை
(சி-10975)

## A/L 95

A/L பரீட்சை எடுத்த
மாணவர்களுக்கான சனி, ஞாயிறு

## மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம்: 24 - 12 - 1994 (சனிக்கிழமை)

| | | |
|---|---|---|
| புவியியல் | - சண்முகராஜா | 10 - 11 |
| அளவையியல் | - சோதிலிங்கம் | 11 - 12 |
| நாடகமும் அரங்கியலும் | - மோசேஸ் | 12 - 01 |
| பொருளியல் | - மகேந்திரன் | 01 - 02 |
| இந்துசமயம் | - கிரிதரன் | 02 - 03 |
| கிறீஸ்தவ நாகரிகம் | - திரு. கொலின்ஸ் | 03 - 04 |
| இந்து நாகரிகம் | - திருமதி அருள்நங்கை | 03 - 04 |
| தமிழ் | - குழந்தை | 04 - 05 |
| அரசியல் | - கியூபேட் | 05 - 06 |

புதிய உயர் கல்லூரி


## பப்பா

பலூன்களும் இனிப்புப் பைகளும் ஆடிக் கொண்டிருந்தன.

சுரோமன் தயக்கமாக பப்பாவின் அருகில் போனான். நிமிர்ந்து பப்பாவை பார்த்தான். கண்கள் குளமாகத் தயாரான தன் தாயைப் பார்த்தான்.

''என்ர அப்பாவைத் தருவீங்களா? பப்பா... என்ர அப்பாவைத் தருவீங்களா?'' உதடுகள் துடிக்க கண்களிலிருந்து நீர் வழிய விம்மலோடு சுரோமன் கேட்டான்.

''ஐயோ என்ர கர்த்தரே என்னை இப் பிடிச் சோதிக்கிறீரே'' என்று பிலோமினா அழத் தொடங்க - கிறிஸ்மஸ் பப்பாவும் அவரோடு வந்தவர்களும் திகைத்துப்போய் நின்றனர்.

'சொல்லுங்கோ பப்பா... எதண்டாலும் தருவீங்களெண்டு சொன்னீங்கள், என்ர அப்பாவைத்தாங்கோவன்...' சுரோமன் பப்பாவின் நீண்ட அங்கியை இழுத்தபடி கேவத் தொடங்கினான்.

வெளியே கரோல் கீதம் இன்னமும் ஒலித்துக்கொண்டிருந்தது.


**Spoken English with Grammer**

by
*BRITTO*

சனி- ஞாயிறு வகுப்பு
புதிய பிரிவு

ஆரம்பம்
24- 12- 94

சனி காலை
12- 1 மணி

## G. A. Q - 96

பேராதனைப் பல்கலைக்கழகம்

★ A/L-இல் 3 பாட சித்தியுடன் 180 புள்ளிகளை பெற்றுக்கொண்டவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விரிவுரைகள் ஆரம்பம்: 24 - 12 - 94
(9 மணி)

விபரங்களுக்கு:
S. அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-10967)


## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
திரு. சோதிநாராயணசாமி சந்திரமோகன்

மலர்வு
7-10-62

உதிர்வு
24-11-94

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய் விளங்கி எங்களைப் பாசத்துடன் பாதுகாத்து வந்த எங்கள் குலவிளக்கு அணைந்ததைக் கேள்வியுற்று வந்து மரணச்சடங்கில் பங்குபற்றியோருக்கும், எங்கள் அறாத்துயரில் பங்கு கொண்டு

இணுவில்

(சி-10957)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி -10962)

12- 1 மணி

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்
(சி-10968)

மரணச்சடங்கில் பங்குபற்றியோருக்கும், எங்கள் ஆறாத்துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும், உற்றார், உறவினர், அயலவர்கள் நண்பர்கள் அனைவருக்கும், நாம் நன்றி நவில்வதுடன் 24-12-94 சனிக்கிழமை அதிகாலை நடக்கவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

எங்கள் குல விளக்கின் ஆத்மசாந்திக்காக அனுதினமும் இறைவனைப் பிரார்த்திக்கும்;

காட்டுப்புலம்,
தொண்டைமானாறு,
வல்வெட்டித்துறை

மனைவி, பிள்ளைகள்
(10448)

# மலரும் புத்தாண்டில் விளையாட்டு ரசிகர்களுக்கு

# ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி

**6-வது** ஆண்டில், காலடி வைக்கும் ஈழநாதம் மக்கள் தினசரியினர்

## மாபெரும் உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகளை

நடாத்த உள்ளனர்

★ வெற்றிபெறும் கழகங்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள்
★ வீரர்களுக்கு தனித்தனி சிறப்பு பரிசில்களும் சான்றிதழ்களும்
★ ரசிகர்களுக்கு பிரவேசம் முற்றிலும் இலவசம்

மேலதிக விபரங்கள் இன்னும் சில தினங்களில்

## ஈழநாதம் தினசரியில்!

## நினைவு அஞ்சலி

8-ம் ஆண்டு | 7-ம் ஆண்டு





வீரவேங்கை தம்பி
(வேலுப்பிள்ளை இராசகோபால்)

மேஜர் முரளி
(வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம்)
(கிங்கோ)

12 - 06 - 1962 < – பிறப்பு – > 06 -10 -1958

15 - 04 - 1985 < – வீரச்சாவு – > 23-12-1987

"எத்துயர் வரினும் உம் பணி தொடர்வோம்"

இவ்விருவருடனும் வீரச்சாவெய்திய மாவீரர்கட்கும் எமது இதய அஞ்சலிகள்

முரளி வீதி, ஆவரங்கால்.

- குடும்பத்தினர்

(10476)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

மக்களின் அன்றாட...

(முன்பக்கத் தொடர்ச்சி)

## தலைவர் பிரபாகரன் 9 கடிதங்கள் சந்திரிகா அரசிற்கு அனுப்பியுள்ளார்

இந்த இடத்தில், ஒரு விடயத்தை உறுதியாக கூறவேண்டும். சந்திரிகா குமாரதுங்கா ஆட்சிபீடம் ஏறிய மூன்று மாத காலத்துள் தலைவர் பிரபாகரன் ஒன்பது கடிதங்களை அனுப்பியுள்ளார். இந்த ஒன்பது கடிதங்களிலும், போர் நிறுத்தத்துக்கு -நாங்கள் தயார்- பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார்- இந்தப் பேச்சுக்களில் என்ன விடயங்கள் ஆராயப்பட வேண்டும்- என்ற விடயங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தேவை ஏற்படும்போது, இந்தக் கடிதங்களை மக்களுக்கு நாங்கள் பகிரங்கப்படுத்துவோம். விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தார்கள் என்று அரசாங்கம் கூறுமானால் அந்தக் கடிதங்களை வெளிப்படுத்தவும் நாம் தயங்கமாட்டோம்.

தலைவர் அவர்களே தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை சம்பந்தமாக ஒன்பது கடிதங்களை எழுதியிருக்கிறாரென்றால், அவருக்கு தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தையில் இருக்கின்ற அக்கறையை இது காட்டுவதாக அமைவதை நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகின்றேன். இந்தக் கடிதங்கள் நீண்ட கடிதங்கள். இவை எல்லாவற்றையும் தொகுத்தால் ஒரு புத்தகமாகவே இருக்கும்.

## ஆரம்பம் முதலே அன்றாட பிரச்சினை தீர்வை தலைவர் வலியுறுத்தினார்

இந்தக் கடிதங்களில் தலைவர் ஒரு விடயத்தை மிக வலுவாக வலியுறுத்திக் கூறிவருகின்றார். தமிழ் மக்களின் அத்தியாவசியமான பிரச்சினைகள்- அவசரமான பிரச்சினைகள் - நாளாந்தப் பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு வருகின்றார்.

கடந்த ஒக்டோபர் 13, 14-ந் திகதிகளில் நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது, மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றித்தான் பேசப்பட்டது. அரசாங்க தரப்புக் குழுவுக்கு தலைமை தாங்கி வந்த பலபத்த பென்டி தனது ஆரம்ப உரையில் கூட, தமிழ் மக்களின் நாளாந்த, அவசியமான பிரச்சினைகளை தீர்த்து வைக்கும்படி சந்திரிகா குமாரதுங்கா தங்களுக்கு வலியுறுத்தியிருப்பதாக கூறினார்.

## அன்றாட பிரச்சினைகள் ஐந்து முதற்கட்டபேச்சில் முன்வைக்கப்பட்டது

அன்றாடப் பிரச்சினைகள் பற்றி முதற்கட்டப் பேச்சுக்களிலும் புலிகள் வலியுறுத்தியிருந்தனர்.

★ இயல்புநிலையைதோற்றுவித்தல்.
★ பொருளாதார தடையை முற்றாக நீக்குதல்.
★ போக்குவரத்துப் பாதையை திறத்தல்.
★ கடல் வலயத் தடையை நீக்குதல்.
★ யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அகதிகளை மீள் குடியமர்த்துதல்.

ஆகிய விடயங்களை முதற்கட்டப் பேச்சுக்களில் நாம் முன்வைத்தோம்.

இந்த விடயங்களை அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் ஆராய்ந்து, அடுத்த முறை வரும்போது இதற்கான தீர்வுகளோடு வருவோம் என அரசாங்க தரப்புக் குழு எமக்கு வாக்குறுதி தந்தது.

## பிரச்சினைகளுக்கான தீர்வில் ராணுவ நிலைப்பாடு சிக்கல் தருகிறது

இப்போது - எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் பற்றி அரசாங்கத்துக்கு சிக்கல் வந்துள்ளது.

அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வில் - இராணுவ நிலைப்பாடு சம்பந்தப்பட்டு சிக்கலைத் தருகின்றது. இராணுவத்தின் இணக்கப்பாடு இல்லாமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதுகடினம்.

இராணுவம் - தனது நிலைகளில்] இருந்து ஒரு அங்குலம் தானும் விட்டுக்கொடுக்க முடியாது எனக் கூறுகின்றது. பேச்சுக்களால் - தனது போர் உபாயங்கள் பாதிக்கப்படக் கூடாது என்று அரசாங்கத்துக்கு இராணுவம் கூறியும் வருகின்றது. அரசாங்கமும் இதற்கு ஒப்புக் கொண்டுள்ளதாக எமக்கு நம்பகரமாக தெரியவருகின்றது. ஆனால் .எங்களைப் பொறுத்தவரை அரசாங்கம் வேறு - இராணுவம் வேறு என்று கூறமுடியாது. அரசாங்கம் விரும்பினால்-இராணுவத்தின்நிலைப்பாட்டையும் மாற்றலாம். ஆனால் அப்படியாக அரசாங்கம் விரும்புவதாகவும் தெரியவில்லை. ஏனெனில் இராணுவம் அரசாங்கத்தின் ஒரு அங்கமே.

## அரசாங்கம் புதிய நிலைப்பாட்டை

## முத்தமிழின் தனித்துவத்தை பேணிக்காத்த கி. ஆ. பெ.

தமிழகத்தின் பிரபலம் வாய்ந்த அந்தக் குடும்பத்தின் எந்த மங்கள வைபவங்களுக்கான அழைப்பிதழிலும் கீழ் வரும் வாசகம் தெரியப்படுத்தப்பட்டிருக்கும்- சீர்;மொய்; பரிசு; பணமுடிப்பு முதலிய விலக்கப்பட்டுள்ளன என்ற வாசகம் அந்தக் குடும்பத்தின் கொள்கைப் பிடிப்பை என்றும் வலியுறுத்திக்கொண்டே இருந்து வருகின்றது. இவ்வாறான குடும்பத்தில் பிறந்தவர்தான் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்.

மூடநம்பிக்கையும் அதனாலுண்டான போலி வேடங்களும் தமிழகத்தை ஆக்கிரமித்த வேளையில் சுயமரியாதை இயக்கத்தில் இணைந்து அவற்றின் முகத்திரைகளை கிழித்தெறிந்தவர் கி ஆ. பெ.

வட இந்தியாவின் இந்தி வெறி தமிழகத்தை மூடிய போதெல்லாம் இந்தி எதிர்ப்பு போரிலே அவர் செய்த போராட்டங்கள் இன்றும் நினைவு கூரப்படுகின்றன. 1938, 1948, 1965 ஆகிய மூன்று போராட்டங்களிலும் அவர் முன்னின்றார்.

தனது பேச்சு வன்மையால் தமிழக மக்களைக் கவர்ந்த கி. ஆ. பெ. தனியே அரசியல் விழிப்புணர்வை மட்டும் ஏற்படுத்துவதில் முன்னிற்காமல் தமிழை வளர்க்க வேண்டும், அதன் தூய நிலையைப்



பேணவேண்டும் என்பதற்காக போராடியவரும் ஆவார்.

முத்தமிழின் தனித்துவத்தை அவர் பேணிவந்த பெருமையை பாராட்டி திருச்சி தமிழ்ச் சங்கம் முத்தமிழ்க் காவலர் என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தது. 1968 இல் சென்னையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் குழுவிலும் அங்கம் வகித்தார்.

எழுத்து, பேச்சு, நாடகம்என அவர்தனதுதிறமையை வெளிக்காட்டியதை தமிழகமே வியந்து பார்த்தது அவர் எழுதிய நூல்கள் அனைத்து துறைகளையும் சார்ந்ததாகவே இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. திருக்குறளினை நுணுகி ஆராய்ந்து அவர் எழுதிய திருக்குறள் புதை பொருள் என்ற தொகுதியென்றாலென்ன-

தமிழ்ச் செல்வம், தமிழின் சிறப்பு, மும்மணிகள், நான் மணிகள், ஐந்து செல்வங்கள், நல்வாழ்வுக்கு வழி, நபிகள் நாயகம் என்று தொடர்ந்து செல்லும் நூல்களின் வரிசையும் அவரது புலமையைச் சுட்டி நிற்கின்றன.

மேடைப் பேச்சுக்களிலும் வல்லவராகத் திகழ்ந்தவர் கி. ஆ. பெ. வானொலியில் அவர் ஆற்றிய உரைகள் ''வானொலியிலே'' என்ற தலைப்பிலே வெளிவந்துள்ளது.

நாடகத்துறையிலும் தன் முத்திரையை சிறப்பாக பதித்தவர் கி. ஆ. பெ. நூற்றுக்கு மேற்பட்ட மேடை நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் அவர் உருவாக்கினார்.

சுதேச மருத்துவத் துறையிலும் ஆர்வம் மிக்கவராக கி. ஆ. பெ. திகழ்ந்தார். தனது 96வது வயதிலும் தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று திறம்பட நடத்தியும் வந்தார். ''தமிழ் மருந்துகள்' என்னும் தலைப்பிலே நூல் ஒன்றையும் அவர் ஆக்கியிருந்தார்.

தமிழினம்தளைகளற்றுசுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியான கருத்தினை கி. ஆ. பெ. கொண்டிருந்தார். தேசியத் தலைவர் பிரபாகரன் பற்றியும்- தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும் எக்காலத்திலும் அவர் கொண்டிருந்த கருத்து-மற்றைய தமிழகத் தலைவர்களிடமிருந்து அவரை இனம் பிரித்துக்காட்டியது. தமிழீழ விடுதலையை உளமார நேசித்த இப் பெருந்தகையின் மறைவு தனியே தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, தமிழ் கூறும் நல்லுலகுக்கே பேரிழப்பாகும்.

ஆனால்-தலைவர் பிரபாகரன் எழுதியிருந்தபடி, போர் நிறுத்தம் என்று கூறிவிட்டு பிரகடனம் ஒன்றைச் செய்வதில் அர்த்தம் இல்லை. போர்நிறுத்தம் சரியான முறையில் பேணப்பட வேண்டும். அதன் வழிமுறைகளை பற்றி பேச வேண்டும் என கேட்டிருந்தார்.

அதற்கு அரசாங்கம் இணங்கியே - 21, 22ந் திகதிகளில்- போர்நிறுத்தம் சம்பந்தமாக ஒரு தூதுக்குழு வருமென அறிவித்தலை எங்களுக்கு தந்தார்கள்.

## ராணுவம்பொருளாதாரத்தடை நீக்கவும் பாதை திறக்கவும் விரும்பவில்லை

அடுத்தது பொருளாதார தடைநீக்கத்தை கருதின், அதற்கும் இராணுவம் விரும்பவில்லையென தெரிகின்றது. அதாவது - எரிபொருட்கள், வாகனங்கள், உரவகைகள் இப்படியான அத்தியாவசியமான பொருட்கள் தொடர்ந்தும் தடையிலுள்ளன. ஏற்கனவே 28பொருட்களுக்கு தடைநீக்கப்பட்டது எனக் கூறினாலும் - அந்தப் பொருட்கள் வருவதிலும் சிரமங்கள் இருக்கின்றது. பொருளாதார தடை நீக்கம் என்று புலிகள் வலியுறுத்துவதும் ஒரு சிக்கலாக அவர்கள் கருதலாம்.

மூன்றாவதாக போக்குவ...

பாதையை திறந்துவிட்டால் மக்கள் போக்குவரத்து செய்யலாம் என்றோம். ஆனால் இராணுவம் பூநகரியில் இருந்து வெளியேற விரும்பவில்லை.

அடுத்ததாக கடல் வலயத் தடை நீக்கத்தை கருதின், இந்தப் பிரச்சினையால் கடந்த பத்துவருடங்களாக எமது மீனவர் சமூகம்-கடல் பிரதேசங்களில் நடக்கும் அக்கிரமங்களால் தொழில் இழந்து பெரிய அவலத்துக்கு ஆளாகியுள்ளது. இவ்வாறான கடல் வலயத் தடையை நீக்கச் சொல்லி கேட்டோம். மீன...

மக்கள் அகதிகளாகவுள்ளனர். இவர்கள்தங்கள்சொந்த இடங்களுக்கு திரும்பிப்போக விரும்புகிறார்கள். ஆனால் ஏராளமான குடியிருப்பு நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. அளவெட்டியிலிருந்து மாதகல்வரைக்கும்-தீவுப் பிரதேசம் என இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே மக்களை மீள் குடியமர்த்துதல் என்றால் இராணுவம் தங்கள்நிலைகளிலிருந்து வாபஸ் பெற வேண்டும். ஆகவே, இராணுவம் அதனை விரும்பவில்லை.

இப்படி எல்லா...

## நியமன கடிதம்

யாழ். கல்வி வலயம் 1-ன் கீழ் உள்ள பாடசாலைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ள பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் உரிய ஆங்கில ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலயம் 1ற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு யாழ். இந்துக் கல்லூரியில் இம்மாதம் 26, 27 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளதாகவும் யாழ். கல்வி வலயம் 1தெரிவித்துள்ளது. (17)

## கிணற்றில்வீழ்ந்து மரணம்

கிணற்றினுள் தவறிவீழ்ந்ததில் ஐந்து வயது சிறுவன் ஒருவர் பரிதாப மரணத்தை

வலியுறுத்துவதும் ஒரு சிக்கலாக அவர்கள் கருதலாம்.

மூன்றாவதாக போக்குவரத்துபாதை திறப்பதைக் கருதின், போக்குவரத்துக்காக நாங்கள் பூநகரிப் பாதையை திறக்க கோரினோம். பூநகரியில் நிற்கும் இராணுவத்தை வாபஸ்பெற்று அந்தப் வலயத் தடையை நீக்கச் சொல்லி கேட்டோம். மீனவர்கள் தங்கள் தொழிலைச் செய்யக் கூடியதாக- கோரிக்கை விடுத்தோம். அதற்கு கடற்படை அனுமதிக்கவில்லை.

அடுத்ததாக, யாழ்ப்பாணத்தில் இரண்டரை லட்சம் ... அதனை விரும்பவில்லை.

இப்படி எல்லா அத்தியாவசியப்பிரச்சினைகளிலும் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது. இராணுவம்-அசைந்து கொடுக்க மாட்டோம் என இறுக்கமான கொள்கையில் இருக்கிறது.

... வர் பரிதாப மரணத்தை தழுவிக் கொண்டார்.

நேற்றுக் காலை நடந்த இச் சம்பவத்தின் போதுயாழ். முனீஸ்வரன்வீதியைச்சேர்ந்த விஜயபாஸ்கரன் தனுசன் [வயது 5] என்ற சிறுவனே இவ்வாறு மரணமானவராவார். [சி]

# அரசாங்கம் புதிய நிலைப்பாட்டை தற்பொழுது கைக்கொள்ள முனைகிறது

அரசாங்கம் தானாகவே அன்றாடப் பிரச்சினைகளை தீர்க்கப் போகின்றோம் எனத் தொடங்கி - இப்போது உடனடியாக பேச்சுவார்த்தையில் இனப்பிரச்சினையின் அடிப்படை பற்றி ஆராயப்பட வேண்டும் என்றபுதிய நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துள்ளது;

இதன் அர்த்தம் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி இப்போது பேச முடியாது என்பதுதான்.

நாங்கள் முன்வைத்த அன்றாடப் பிரச்சினைகளில் இயல்பு நிலையை தோற்றுவித்தலை கருதினால் - போர்நிறுத்தம் மூலம்தான் இயல்பு நிலையை தோற்றுவிக்க முடியும். விடுதலைப் புலிகள் இயக்கம் உருப்படியான நிலையான போர் நிறுத்தத்தை விரும்புகின்றார்கள். அப்படியான ஒரு போர் நிறுத்தம் வந்தால்தான் இயல்பு நிலை தமிழ் தாயகத்தில் தோன்றும் என்பது எங்களது நிலைப்பாடு. இதை தலைவர் பிரபாகரன் தனது கடிதங்களில் வலியுறுத்தியும் இருக்கிறார்.

# அரசோ, இராணுவமோ நிலையான போர் நிறுத்தத்தை விரும்பவில்லை

ஆனால் இராணுவமோ அரசாங்கமோ நிலையான நிரந்தரமான போர் நிறுத்தத்தை கொண்டு வர விரும்பவில்லை.

இது தொடர்பான கடிதப் போக்குவரத்துகளிலும் ஒரு சிக்கல் எழுப்பப்பட்டது. போர் நிறுத்தத்தை இரண்டு கட்டங்களாக அவர்கள் பிரிக்கிறார்கள். ஒன்று மோதல் நடவடிக்கைகளை அல்லது போர் நடவடிக்கைகளை இடைநிறுத்தம் செய்தல் (Cessation of Hostilities) அதாவது தற்காலிகமானது- இதன் இறுதியாகத்தான் முழுமையான போர் நிறுத்தம் வருமென்று அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள்.

உண்மையில், உலகின் போர் நிறுத்த நடைமுறைகளை நாங்கள் ஆராய்ந்த போது Cease Fire என்றால்- Cessation of Hostilities தான் அதனது அர்த்தம்.

ஆனால் அரசாங்கம் அதை வேறுபடுத்தி - மோதல்களை முதலில் கொஞ்ச காலத்திற்கு இடை நிறுத்தி வைக்கலாம் என தெரிவித்தது.

இது நிரந்தரமான நிலையான ஒரு போர்நிறுத்தத்தை அரசாங்கம் விரும்பவில்லை என்பதை காட்டியது. ஒரு தற்காலிகமான மோதல் தவிர்ப்பையே அரசாங்கம் விரும்புவதையும் இது விளக்கியது.

# கருத்து முரண்பாட்டை வளர்க்க தலைவர் பிரபாகரன் விரும்பவில்லை

தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதமொன்றில் - இவ்விடயத்தில் கருத்து முரண்பாடு தேவையில்லை. அரசாங்கம் விரும்புவதுபோல் போர் நடவடிக்கைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இடைநிறுத்தம் செய்து பேச்சுக்களை தொடர்வோம் எனத் தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் - போர் நடவடிக்கைகளை இரண்டு வார காலத்துக்கு இடைநிறுத்தம் செய்து பிரகடனம் ஒன்றை வெளிவிடுவதாகவும் - விடுதலைப் புலிகளும் மோதல்களை அக்காலகட்டத்தில் தவிர்த்து அறிக்கையொன்றை வெளியிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. நாங்கள் அதற்கும் ஒத்துக்கொண்டோம்.

இதிலிருந்து நாங்கள் ஒன்றை தெளிவாக புரிந்து கொண்டோம். அது என்னவென்றால்-உறுதியான நிலையான ஒருபோர் நிறுத்தத்தை உருவாக்கி ஒரு சமாதான சூழ்நிலையையும் இயல்பு நிலையையும் தோற்றுவிக்க அரசாங்கம் தயங்குவதை நாங்கள் உணர்ந்து கொண்டோம். இராணுவம் நிரந்தரமான போர் நிறுத்தத்தை உருவாக்காமல்- ஏதோ இரண்டுவார காலம் தாக்குதல் நிறுத்தத்தை செய்துபார்ப்போம் - பேச்சுக்கள் நடத்துவோம். பின்பு சில சமயங்களில் அதனை நீடிப்பது போன்ற யோசனைகளும் அவர்களுக்கு இருந்திருக்கலாம். அரசாங்கம் எங்களுக்கு எழுத்தில் இரண்டு வாரகால தாக்குதல் நிறுத்தம்பற்றியே அறிவித்து. அதை நீடிப்பது பற்றிஒன்றும் குறிப்பிடவில்லை.

# 40 வருடச் சிக்கலான பிரச்சினையை எடுத்த எடுப்பில் தீர்த்துவிட முடியாது

இந் நிலையில் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் புறந்தள்ளி- நேரடியாக இனப்பிரச்சினைக்கு வருவோம் என அரசாங்கம் நினைக்கின்றது.

சமாதான முயற்சிகள் - இனப்பிரச்சினை தீர்வுக்கான இறுதிநோக்கத்தை கொண்டதென நாங்கள் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் இச்சமாதான வழிமுறை கட்டங்கட்டமாக நடைபெற வேண்டுமென தலைவர் பிரபாகரன் கருதுகிறார். எடுத்தஎடுப்பில் - 40 வருட வரலாற்றைக் கொண்ட ஒரு சிக்கலான பிரச்சினையைத் தீர்க்க முடியாது. தீர்வுக்கு நாங்கள் கட்டம் கட்டமாக போவோம்.

அதில் - முதற்கட்டங்களில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பது பற்றியும் - இயல்பு நிலையை தோற்றுவிப்பது பற்றியும் - மக்களின் பளுக்களை குறைப்பது பற்றியும் - ஆராயலாம் என நாங்கள் கூறுகிறோம். இதனால் மக்களுக்கு ஓர் நம்பிக்கை பிறக்கும்-நிம்மதியான வாழ்வைத்தரும் இப்படியான சூழ்நிலையில் - இனப்பிரச்சினைக்கானஅடிப்படைபற்றி ஆராய்வோம் என தலைவர் தனது கடிதங்களில் எழுதியுள்ளார்.

அவலங்கள் ஒவ்வொன்றும் போர் நடவடிக்கைகளினால் தான் வந்துள்ளது,

நாம் உடனடிப் பிரச்சினைகளை முதலில் பார்ப்போம் என்கிறோம்.

இராணுவத்தை கொஞ்சத் தூரம் விலக்கி பாதையைத் திறக்க முடியாத அரசால் 40 வருட காலமான இனப்பிரச்சினையைத் தீர்த்து, தமிழர் தாயகத்திலிருந்து இராணுவத்தை முற்றாக வாபஸ் பெறமுடியுமா? இப்படியொரு கேள்வி எழுகிறது.

அன்றாடப் பிரச்சினையைத் தீர்க்காத அரசாங்கம் அடிப்படைப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கப்போகிறது?

தலைவர் பிரபாகரன்பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில், பேச்சு வார்த்தைகள் கட்டங்கட்டமாகவே மேற் கொள்ளப்பட வேண்டுமெனவும்- தமிழ் மக்களின் அத்தியாவசியமான அன்றாடப் பிரச்சினைகள் முதற் கட்டமாக ஆராயப்பட வேண்டுமெனவும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தினால் கடந்த 20-ம் திகதி விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில்-யுத்தத்தின் மூலங்களை பேச்சுக்களில் ஆராய வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது

இதற்கு பதிலளித்துள்ள தலைவர் பிரபாகரன் - யுத்தத்தின் மூலங்களை ஆராய்வதற்கு முன்னதாக - யுத்தத்தினால் தமிழ் மக்கள் அடைந்துள்ள பாதிப்புக்கள்பற்றியே தீர்வு காணப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# போர் நிறுத்தத்திற்கும் பேச்சிற்கும் புலிகள் என்றும் தயாராகவே உள்ளனர்

விடுதலைப் புலிகள் எந்த வேளையிலும் போர் நிறுத்தத்திற்கும் சமாதானப் பேச்சுக்களுக்கும் தயாராக இருப்பதாக தனது கடிதத்தில் தலைவர் பிரபாகரன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தலைவர் பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பது சம்பந்தமாக பெரிய முயற்சி செய்கின்றார்.

அரசாங்கம் தலைவரின் கடிதத்திற்கு பின்னர் சாதகமான முடிவெடுத்து பதில் எழுதலாம். பேச்சுவார்த்தைக்காக தூதுக்குழுவை அனுப்பலாம். அப்படியாயின்பேச்சுவார்த்தை நடைபெறும்.

எப்படியிருப்பினும்-அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதுவும் அரசாங்கத்தின் கைகளில் தான் தங்கியுள்ளது என அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 12 - 23**
**வெள்ளி இரவு**

08. 01 - மேஜர் முரளி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி- நாமகள் எழுதிய ''இறப்பினுள் உயிர்ப்பவன்''

08. 25 - கணப்பொழுது- சி. கண்ணம்மா எழுதிய 'கப்டன் வாணன்'

08. 30 - செய்திகள்

08. 40 - அரசியல் அரங்கம் - வே. பாலகுமாரன் எழுதிய ''சனநாயகம் என்னும் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை''

08. 50 - வாத்திய கானங்கள்

09. 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994 - 12 - 24**
**சனி காலை**

07. 02 - மாவீர வணக்கம்

07. 15 - நீங்கள் கேட்டவை

07. 30 - செய்திகள்

07. 35 - பத்திரிகைச் செய்திகள்

07. 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்
தினசரி 4. 30, 6.30
சனி, ஞாயிறு 10. 30, 4. 30, 6. 30

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்
★ எல்லைக் கற்கள் ★
(முழு நீள வர்ணப்படம்)

தினசரி பி.ப 2.30க்கு மட்டும்
விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய
ந. கேசவராஜனின்
★ பிஞ்சு மனம் ★
(வர்ண முழுநீளப்படம்)
(சி- 10989)


# யாழ். பல்கலையில் பொறியியற்பீடம் ஆரம்பிக்க துணைவேந்தர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்திற்கு குறைந்த வளங்களையாவது வழங்கி பொறியியல் பீடத்தை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக் குழுவிடம் துணை வேந்தர் கோரியுள்ளார்.

கடந்த முறை கொழும்பு சென்ற போதே யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரட்ணம் இக்கோரிக்கையை விடுத்திருந்ததாக பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார்.

இக் கோரிக்கையை மானிய ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு ஆகியன தமது பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

எனினும் இது தொடர்பான உத்தியோக பூர்வமான பதில் எதுவும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கப்பெறவில்லை என தெரியவருகிறது.

இதன்படி பொறியியல் பீடத்தினை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆளணி மற்றும் சில அடிப்படைத்தேவைகளை பெற்று பொறியியல் பீடத்தை ஆரம்பித்து காலப் போக்கில் அதனை அபிவிருத்தி செய்வதே துணைவேந்தரின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டது: (இ. பா)

# க. பொ. த. (உ/த) பரீட்சை 45 வீதமானோர் அனுமதிக்கு தகுதி

கடந்த ஆகஸ்டில் நடந்த க. பொ. த. (உ/த) பரீட்சையில் 145 மாணவர்கள் நான்கு பாடங்களிலும் ''ஏ'' தரச் சித்திகளைப் பெற்றுள்ளதாகவும் 45 சதவீதமானோர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகைமை பெற்றுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் உயர்கல்வி பெறும் பெண்களின் வீதமும் அதிகரித்து வருவதாகவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# சிறில் பொன்னம்பெருமா அமெரிக்காவில் மரணம்

(கொழும்பு)

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியான பேராசிரியர் சிறில் பொன்னம்பெருமா அமெரிக்காவில் காலமானார்.

காலியில் பிறந்த இவர் கலிபோர்ணியா பல்கலைக் கழகத்தில் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் கல்வினிடம் விண்வெளி விஞ்ஞானம் பற்றி பட்டமேற்படிப்பை மேற்கொண்டார்.

உயிரினம் - இரசாயன மூலம் குறித்து ஆய்வு வேலைகளைச் செய்ததனால் நாஸா ஆய்வுகூடத்தின் தலைமை விஞ்ஞானியாகவும் இவர் இருந்து வந்தார்.

அப்பலோ விண்வெளிப் பிரயாணத்தின் போது சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்ட மாதிரிக் கற்களையும் இவர் ஆய்வு செய்தார்.

சிறிலங்காவின் பிரஜாவுரிமையை நிராகரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரோந்துப்படகுகள் தரிப்பு

மண்டைதீவுக்கடலில்நேற்று முன்தினம் சிறிலங்கா கடற்படையின் ரோந்துப் படகுகள் மூன்று தரித்து நின்றதாக குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர். மேலும் நேற்று முன்தினம்மீனவர்கள் பலர் இப் பகுதியை அண்டியுள்ள கடற் பரப்பில் மீன் பிடிக்கச் செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது,

மேலும் இக் கடற்பரப்பில் அண்மைய நாட்களில் கடற்படை ரோந்துப் படகுகள் அடிக்கடி திரிவதுடன் மீனவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்து வருவதனால் இப் பகுதி மீனவர்களின் தொழில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி வருவதாகவும் அறியப்படுகிறது.

(17),(21)

## வீரவணக்க கூட்டம்

மேஜர் முரளி உட்பட 10 வேங்கைகளின் 7ஆம் ஆண்டு நிறைவு வீரவணக்கக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் இன்று மாலை 4-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆவரங்கால் நடராசஇராமலிங்க வித்தியாலயத்தில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

## பிரதேச

ளப்பட்டுவருகிறது. இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவித்திட்டப் பணிப்பாளர்கள், சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்களின் (சனசமூக நிலையங்கள்) தலைவர்,செயலாளர் மற்றும் தமிழீழஊரக மேம்பாட்டு பங்கேற்பவைகள் (கிராம அபிவிருத்திச் சங்கம்) ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பவைகள் (மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்) ஆகியவற்றின் தலைவர்,செயலாளர்கள் ஆகியோர் குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளித்து ஆலோசனைகளை தந்துதவும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர்.

இன்று காலை 10 மணியளவில் மருதனார் மடம் இராம


இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
மகாத்மா நெல்லியடி
தெய்வேந்திரா சாவகச்சேரி
ஆகிய திரை அரங்குகளின் அகன்ற திரையில்
மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக்கழகம் வழங்கும்
கே. ஏ. அன்ரனியின்
'எல்லைக் கற்கள்'
(வர்ண முழு நீளப் படம்)
தினசரி - 6. 30
சனி, ஞாயிறு - 10. 30, 2. 30, 6. 30
(சி-10858)


ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு

## நாங்கள் மெதுவாக ஆனால் பலமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம்

### இன்றுடன் எமக்கு 4 வருட நிறைவு

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா இன்று 4-வது அகவையைப் பூர்த்தி செய்கிறாள். அதாவது 4 வருடங்களை பூர்த்தி செய்கிறாள். இன்று 5 வது வருடத்தில் தனது சிறிய பாதங்களை ஊன்றி வைக்கிறாள். கடந்த 4 வருடங்கள் நெருக்கடியான காலப் பகுதியில் பல சோதனைகளுக்கு மத்தியில் தனது

# 1972 - 73 கால அ. அட்டை ஜனவரி முதல் காலாவதி

(கொழும்பு)

1972 - 1973 காலப் பகுதியில் பெறப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் காலாவதியாகும் என ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் பெறப்பட்டிருந்த அடையாள அட்டைகளை மாற்றுவதற்கு கடந்த இரு வருடங்களாக பல தடவைகள் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவு திணைக்களம் 71 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது முதல் ஒரு கோடி 40 இலட்சம் அடையாள அட்டைகள் விநியோகிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16, 17 வயதிற்குள் அடையாள அட்டை பெறவேண்டும் எனவும் ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

## இரு படையினர்

கடற்படை வீரர்கள் காயமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வசாவிளான் சாவலரண்கள் மீதும் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு

மேஜர் ஜெனரல் ரி. ஜெயசுந்தர மணலாறு, திருகோணமலை நடவடிக்கைகளுக்கு பொறுப்பேற்றுள்ளார்.

பிரிகேடியர் நளின் அங்கமன இராணுவச் செயலாளராக பதவி பெற்றுள்ளார்.

## வடபகுதி

இதனால் பயணிகள் பெரும் அச்சத்துடன் சிதறியோடினர். தாய்மார் தங்கள் கைக் குழந்தைகளுடன் பாதுகாப்பைத் தேடி ஓடியதாக சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவிக்கின்றனர்.

இதன்பின் தாண்டிக்குளம் தடைமுகாமை அடைந்த பயணிகள் இளைஞர், யுவதிகள், நடுத்தரவகுப்பினர்,முதியோர் என பிரிக்கப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டு தடுத்துவைக்கப் பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு வவுனியா நகருக்குள் கொண்டு செல்லப்பட்டு தீவிரமாக விசாரணைக்குள்ளாக்கப்பட்டு புகைப் படங்களும் எடுக்கப்பட்டு பிற்பகல் அளவிலேயே விடுதலை செய்யப் பட்டனர்.

## உடனடிப்

(குளிர்பானம் உட்பட) சுட்டுத் துண்டிடுதல் வேண்டும். அதில் உணவின் அளவு, பண்பு, பெறுமதி, சேர்வை, தயாரிக்கப்பட்ட நாள், காலாவதி நாள் தயாரிப்பு நிலையம், முகவரி போன்ற விபரங்கள் கொண்டிருந்தாலன்றி விற்பனை செய்தலோ அல்லது வெளிக் காட்டி வைத்தலோ ஆகாது.

இத்தடை விதிப்பை அமுல் படுத்த தமிழீழ உணவுச்சட்டத்தின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட சகல அலுவலர்களும் ஈடுபடுத்தப்படுவர். பறிமுதல், தண்டனை ஆகியவற்றைத் தவிர்க்க இதில் ஈடுபட்டுள்ள சகல வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் பொது மக்கள் நலன்கருதி சுகாதாரத்தைப் பேண எம்முடன் ஒத்துழைப்பதோடு, உடல் நலத்தையும்,பொருளாதாரச் சிதைவையும் கருத்திற்கொண்டு, சுகாதாரப் பாதுகாப்பின்றி வைத்திருக்கும் இடங்களிலிருந்து உணவுப் பண்டங்களை வாங்க வேண்டாமெனவும் தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


மேஜர் முரளி உட்பட
10 வேங்கைகளின்
7-ம் ஆண்டு நிறைவு வீரவணக்கக்
கூட்டமும், கலைநிகழ்வும்

காலம் :- 1994-12-23 (இன்று)
மாலை 4 00 மணி.
இடம் :- யா/ஆவரங்கால் நடராச இராமலிங்க



பிறப்பு

04- 06- 1971

வீரச்சாவு

03- 01- 1994

## கப்டன் துரை\சிறிகாந்த்

(தேவராஜா பாஸ்கரன்)

செந்தமிழ் ஈழநாட்டில் சிறப்புடன் வாழுகின்ற
நந்தமிழ் நாட்டுக்குற்ற நலிவினைப் போக்களண்ணி
பைந்தமிழ்ப் பாலரெல்லாம் பாரினில் வீறுகொண்டு
மந்திரப் புலிகளாகி மானத்தைக் காத்து நின்றார்.

ஈரிரண் டாண்டுகாலம் எங்களின் பாஸ்கரனும்
போரினில் பயிற்சி பெற்றுப் பொருதிறல்வீரனாகி
பாரினில் எமையெதிர்க்கும் படைபலத்
தைக் குறைக்கும்
வீரியமிக்க வேவுபார்த்திடு புலியாய் நின்றான்.

வெங்களப் புலியாய்மாறி வேதனை தந்துநிற்கும்
சிங்களச் சிறுநரிகள் செருக்கினை அடக்குதற்கு
பெ ங்கிடும் சினத்தினோடு பூநகர் மீதுபாய்ந்து!
சங்கெடுத் தாதிநின்று சரித்திரம் படைத்தாரன்றோ!

மீண்டுமோர் வேவுபார்க்க விழைந்திடு காலைதன்னில்
தூண்டிடு மனத்தினோடு துவண்டிடா உறுதியோடு
தாண்டியே பலமைல்கள் தடங்கல்கள் கடந்தபோது
வேண்டியே ஆங்குபோட்ட விதைவெடி தீர்ந்தபோது.

சோதனை வந்துவந்து துயர்தனைத் தந்தபோதும்
சாதனை பலவும் செய்து சரித்திரம் படைக்கும்
எங்கள்
வேதனை போக்கவந்த விடுதலைப் புலிகள்வீர
சாதனை புரியவேண்டும் சரித்திரம் மாறவேண்டும்.

728, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தாய், தந்தை, சகோதர சகோதரிகள்

(10476)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31, ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நாள். கடந்த 4 வருடங்கள் நெருக்கடியான காலப் பகுதியில் பல (சோ தனைகளுக்கு மத்தியில் தனது சேவையை மேற்கொண்டாள். அதற்கு மிக முக்கிய காரணம் எமது வாடிக்கையாளர்களாகிய நீங்கள்! இந்த காலப்பகுதியில் எமக்கு ஆதரவு நல்கிய உங்களுக்கு இறைவன் சார்பில் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறாள். கடந்த காலங்களில் நாங்கள் ஏதும் தவறுவிட்டிருந்தால் அல்லது உங்களது மனம் கோண நடந்திருந்தால் அதற்கு மன்னிப்புக் கோருகின்றோம். தொடர்ந்து உங்களுக்கு சிறந்த சேவையை அளிக்க உங்கள் கருத்துக்களையும், முறையீடுகளையும் தக்க சான்றுடன் தயவு செய்து தெரிவியுங்கள். நாங்கள் மேலும் முன்னேற்றம் அடைவதற்கு அதுவே எங்களுக்கு ஊன்றுகோல்கள். நீங்களே! எங்கள் சிருஷ்டி கர்த்தாக்கள். அதற்கு இந்த நன்றிகள் பல. இந்த வேளையில் எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அன்பர்களுக்கு

கிறிஸ்து யேசுவின் பிறப்பாகிய
கிறிஸ்தோய நல்வாழ்த்துக்களை
சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றாள்

உரிமையாளர்: ஜோ. எகட்டன் ஊழியர்கள்

நாங்கள் உங்கள் உணவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம்

புது யுகத்தில் புது உருவம்

ஜெசித்தாரா

[சி-10977[

;ஜஜுமாஜ

வருடம் 365

நாளும் தினமும்

காலை 11. 45 முதல் 3. 30 பிற்பகல் வரை

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின்
உணவுப் பொதிகளை தங்கு
தடையின்றி பெற்றுக்கொள்ளலாம்.

ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி- 10976)

இன்று காலை 10 மணியளவில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் உடுவில்பிரதேசசெயலகப் பிரிவுக்கும் பிற்பகல் இரண்டுமணியளவில் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்கும் இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்கும் பிற்பகல் இரண்டு மணிக்கு சித்தன் கேணி கணேசானந்தா வித்தியாலயத்தில் சங்கானை பிரதேச செயலகப் பிரிவிற்கும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாசாலையில் கரவெட்டி பிரதேச செயலக பிரிவினருக்கும் பிற்பகல் இரண்டு மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியா சாலையில் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவினருக்கும் நடைபெறவுள்ளது.

27-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு புத்தூர் சோமாஸ் கந்தா வித்தியா சாலையில் கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்கும் பிற்பகல் இரண்டு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தினருக்கும் 28-ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பளை மகாவித்தியாலயத்தில் பளை பிரதேச செயலகத்தினருக்கும் பிற்பகல் இரண்டு மணிக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவினருக்கும் நடைபெறவுள்ளது.

29-ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் மண்டபத்தில் யாழ். பிரதேச செயலக பிரிவினருக்கும் இக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

மாலை 4 00 மணி.

இடம் :- யா/ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்.

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

★ இறுதியில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நன்றி

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
யாழ். மாவட்டம்.

அன்பளிப்பு:-
பிரபா பல்பொருள் வர்த்தக நிலையம்,
நித்தியா பாடசாலைச் சேவை,
- உரும்பிராய். -

(சி-10990)

## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்துரை கண்மணி
### (சிவன்கோயிலடி மட்டுவில் வடக்கு)

மட்டுவில் சிவன்கோயிலடியினை பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற ஐயாத்துரைஅவர்களின் அன்பு மனைவியுமான கண்மணி 22-12-1994 அன்று காலமானார். இவர் சரவணபவானந்தன், முத்தம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற விசுவலிங்கத்தினதும் (இ. போ. ச.), இராசேஸ்வரியினதும் அன்பு மாமியாரும், கவிதா, துசிதா, சுமித்திரா, தர்சிகா, பிரதீபன், சயந்தன், கௌசிகன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23-12-94) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12. 30 மணிக்கு குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. சரவணபவானந்தன் (பெரியானந்தம்)
(மகன்)
சிவன்கோயிலடி,
மட்டுவில் வடக்கு.

(10478)